CHARTERED ACCOUNTANCY
CAB II ENGLISH MEDIUM STARTED ON 09.02.2013
VEAL BUSINESS COLLEGE
ADMISSION STILL OPEN
CONTACT : 0777 555 738

பங்குனி மாதம் 10ம் திகதி

March 23, 2013

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 35

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# இந்தியாவிற்கு எதிரான இலங்கையின் நடவடிக்கைகளில் கேந்திர நிலையமாகும் திருகோணமலை

## "ஐ. ஓ. சி நிறுவனத்தின் பயன்பாட்டிலுள்ள எண்ணைக் குதங்களை மீளப்பெற முஸ்தீபு"

இலங்கைக்கு எதிராக இந்தியா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளின் எதிர்வினையாக இலங்கை இந்தியாவைப் பொருளாதார ரீதியில் வெளித்தள்ள எடுக்கும் முயற்சிகளின் கேந்திர நிலையமாக திருமலை மாறிவருகின்றது.

ஏற்கெனவே சம்பூரில் அனல் மின் நிலையத்தை அமைக்கும் மானிகள் தொடர்பாக இந்திய அரசுடன் முரண்படத் தொடங்கியுள்ள இலங்கை அரசு தற்போது திருகோணமலையிலுள்ள எண்ணைக் குதங்களில் இந்திய எண்ணை நிறுவனமான ஐ.ஓ.சி நிறுவனத்தின் பாவனையிலுள்ள எண்ணைக்குதக் களஞ்சியங்களை மீளப்பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது. (7ம் பக்கம்)

## அமைச்சர் ஹக்கீம் கள ஆய்வு

### புல்மோட்டையில் உறுதிமொழி



கடந்த சனிக்கிழமை திருக்கோணமலையின் புல்மோட்டை பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம்.. (7ம் பக்கம்)

# ஐ. நா மனிதவுரிமைச் சபையில்

## – திருமலை வைத்திய கலாநிதியின் குரல் –



"தலைவர் அவர்களே, எனது பெயர் வைத்திய கலாநிதி காசிப்பிள்ளை மனோகரன். 2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 02ம் திகதி திருகோணமலைக் கடற்கரையில் இலங்கைப் படையினரால் கொடூரமாக எனது மகன் இரஜீகர் கொல்லப்பட்டார். இக் கொலைக்கு நியாயம் கேட்க முற்பட்டதால் நானும் எனது குடும்பமும் இலங்கையிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளோம்." என ஆரம்பித்து தனது மகனின் கொலைக்காக நியாயம் கேட்டு ஐ.நாவின் மனிதவுரிமை.. (7ம் பக்கம்)




## – அச்சுறுத்தல் –

### தவிசாளர் சுபியானுக்கு

தம்பலகாமம் பிரதேச சபையின் தவிசாளர் சுபியான் இனம் தெரியாத தொலைபேசி அழைப்புக்களின் மூலம் அச்சுறுத்தப்பட்டுள்ளார். குறித்த தொலைபேசிகளின் ஊடாக இனம் தெரியாதோர் சுபியானுக்கு கொலைமிரட்டல் மற்றும் கடத்தல் அச்சுறுத்தல் விடுத்ததாக தெரியவந்துள்ளது. (7ம் பக்கம்)

# மூதூரில் சனாதிபதிக்கு ஆதரவாக – அமைதிப் பேரணி –



"மக்கள் மீள்குடியேற்றப் போராட்டத்திற்காக அழைத்துச் செல்லப்பட்டதாக" தகவல் (7ம் பக்கம்)

## பிரதீப் மாஸ்டரின் அங்கத்துவம் பறிபோனது

### த. ம. வி. பு கட்சியிலிருந்து மேலும் இருவர் நீக்கம்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா கட்சிப் பதவிகளிலிருந்து.. (7ம் பக்கம்)

# பொத்துவிலில் ஹர்த்தால் !!

# கல்முனையில் பேரணிக்கு அழைப்பு !!!

## "உரிமைகளுக்காகச் சாத்வீகப் போராட்டத்தில் களமிறங்கும் கிழக்குச் சிறுபான்மை மக்கள்"

(7ம் பக்கம்)

## கந்தளாய் அக்போபுரவில் ஆயுள்வேத மருந்தகம் திறப்பு



மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் மாகாண சுதேச வைத்தியத் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில் அக்போபுர ரஜவெவ எனும் இடத்தில் ஆயுள்வேத மருந்தகம் கிழக்கு மாகாண ஆளுனர் ரியஸ் அட்மிரல் மொஹான் விஜய விக்ரமவால் இம்மாதம் பதின்மூன்றாம் திகதி... (7ம் பக்கம்)

## சென்னைக்கான விமான சேவையை குறைத்துள்ளது ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்

இலங்கையின் தேசிய போக்குவரத்து வான் சேவையான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் சென்னைக்கான தனது வாராந்தப் பயணங்களை அரைவாசியாகக் குறைத்துள்ளது.

இலங்கைக்கும் சென்னைக்கும் இடையிலான பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட பெரும் குறைவை அடுத்தே தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான விமானச் சேவை எண்ணிக்கையை வாராந்தம் இருபத்தெட்டு.. (7ம் பக்கம்)

## கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் – அலுவலகம் தாக்குதல் – அமைச்சரின் இணைப்புச் செயலாளர் அடாவடி!

வரோதய நகரில் உள்ள கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் அலுவலகம் கிழக்கு மாகாண விவசாய அமைச்சரின் இணைப்புச் செயலாளரின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

இத்தாக்குதல் தொடர்பாக விவசாய அமைச்சின் அதிகாரிகள் முதலமைச்சர்,... (7ம் பக்கம்)

## சர்வோதயம் + தரிசனம் தொலைக்காட்சி

பாடசாலை மாணவர்களிற்கிடையிலான அறிவுக்களஞ்சியப் போட்டி 2013 (3ம் பக்கம்)

**ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் வெற்றியாளர்கள்.**

அடுத்த வாரத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மலைமுரசின் பரீட்சை வெற்றியாளர்களின் பெயர்கள் வெளியிடப்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2வது மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

**வணக்கம் !**

## சனநாயகமும் சன-நாயகர்களும்!!!

உரிமைக்காக மக்கள் சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுப்பது என்பது சனநாயகம் விரவியுள்ள நாடுகளின் சனநாயகப் பண்பைத் தெளிவாக வெளிக்காட்டும் குறிகாட்டியொன்றாகவே காணப்படுகின்றது.

எனினும் இலங்கையில் கடந்த 30 வருடகால இனப் போரின் போது சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுத்த மக்களை அடக்கியாள ஆயிரக்கணக்கான ரவைகள் சுடப்பட்டன. அவை யாவும் போரின் பெயரால் "சரி" எனக் கணக்கிடப்பட்டும் விட்டன.

போருக்குப் பின்னர் உரிமைகளுக்கான சாத்வீகப் போராட்டங்கள் நடைபெறவே இல்லை எனலாம். ஆனால் தற்போது கிழக்கில் அபகரிப்புக் களுக்கு எதிராக சிறுபான்மைச் சமூகமொன்று இரண்டுவகையான போராட்டங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அபகரிப்பு என்ற உணர்வு மக்களுக்கு ஏற்பட்டதனால் தான் இனப்போர் உருவாகி இலங்கையின் வரலாற்றில் கறைபடிந்த மூன்று நூற்றாண்டுகளை நிறைவு செய்துள்ளது.

சனநாயகம் அரசியல் தோலினால் போர்க்கப்படும் போதெல்லாம் சிறுபான்மையின மக்கள் அபகரிப்பை மனரீதியாக உணர்வர் என்பதே வரலாறுகள் கற்றுத் தந்துள்ள பாடம். அங்கு சனநாயகம் வாய்ப்பேச்சள விலேயே இருக்கும்.

எனில் சனநாயகத்தின் காவலர்கள் யார்? மக்களால் தேர்வான அரசும் அந்நாட்டின் சட்டத்துறையுமே.

இங்கு அரசிலிருந்து அரசியலை வேறுபடுத்திப் பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. அரசு தன்னை அரசியலிலிருந்து வேறாக்கிப் பார்க்குமானால் அங்கு தான் உண்மைச் சனநாயகம் உருப்பெறும். அரசியலிலிருந்து அரசைத் தனித்துப் பார்ப்பதற்கு அரச தலைவரே முதற் கண்ணாக விளங்குகின்றார். எனவே மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரச தலைவர் தனக்களிக்கப்பட்ட மக்கள் ஆணையாக இதனைக் கைக் கொண்டால் மாத்திரமே சனநாயகம் நாட்டில் நிலைத் திருக்கும்.

சனநாயகத்தைப் பாதுகாக்கும் சன நாயகர்களாக அரச தலைவர்கள் மாற எல்லாம் வல்ல இயற்கையைப் பிரார்த் திப்போமா....!

-ஆசிரியர்-

## அதிவேக சாலையில் "அவசரக் கடமை" அபராதம்: ஆயிரம்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் சிறுநீர் கழித்த இருவர் தண்டனைக்குட்படுத்தப் பட்டுள்ளனர். அதிவேக நெடுஞ்சாலையில் அதிகாலையில் பயணித்துக் கொண்டிருந்த வர்த்தகர் ஒருவரும் அவரது வாகனச் சாரதிக்கும் அவசரமாக சிறுநீர் கழிக்கும் உணர்ச்சி ஏற்பட்டதால் சாலையோரத்தில் வாகனத்தை நிறுத்திய இருவரும் அவசரக் கடமையை நிறைவேற்றிய போது அவ் இடத்திற்கு வந்த காவல்துறையினர் அவர்களைக் கைது செய்து பண்டாரகம நீதிவான் அவர்களிடம் முன்னிலைப் படுத்தினர்.

குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவை ஏற்பாடுகளின் "பெருந் தெருக்களில் கழிவகற்றல்" என்னும் பிரிவின் கீழ் இவர்களின் நடவடிக்கை குற்றமாக காணப்பட்டதால் ஆளுக்குத் தலா 1000 ரூபாய்கள் தண்டம் விதிக்கப்பட்டது.

## ஏர்டெல் கைப்பேசிச் சேவையைக் கொள்வனவு செய்யுமா டயலொக்

இலங்கையின் கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனர்களின் முதலிடத்திலுள்ள டயலொக் நிறுவனத்தின் தாய்க் கம்பனியான அக்ஸியாட்டா நிறுவனத்தை அனுகியுள்ள பாரதி ஏர்டெல் இந்திய நிறுவனம் தமது இலங்கை ஏட்டெல் நிறுவனத்தைக் கொள்வனவு செய்யுமாறு கோரியுள்ளதாக தெரியவருகின்றது. பாரதி ஏர்டெல் நிறுவனமானது சுமார் 1.7 மில்லியன் இலங்கை வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ளதுடன் சுமார் நாற்பத்து இரண்டாயிரம் விற்பனையாளர் வாடிக்கையாளர் சேவை நிறுவனங்களையும் நாடு முழுவதும் கொண்டுள்ளது.

**சந்தைப் பங்கு**

| | | |
|---|---|---|
| டயலொக் | - | 40 வீதம் |
| மொபிடெல் | - | 21 வீதம் |
| எடிசலாட் | - | 20 வீதம் |
| ஏர்டெல் + ஹட்சிசன் | - | 19 வீதம் |

இருநூறு மில்லியன் டொலர்களை 2009ம் ஆண்டு தொடக்கம் முதலீடு செய்ய உத்தேசித்திருந்த ஏர்டெல் நிறுவனம் தற்போது தனது முடிவை மாற்றிக்கொண்டு இலங்கையிலிருந்து தனது முதலீட்டை ஆபிரிக்க நாடுகளுக்கு நகர்த்த முடிவு செய்துள்ளதை தொடர்ந்து தனது இலங்கை வியாபாரத்தை விற்றுவிடும் முடிவை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது.

## ஆவணங்கள் உள்ளவர்களுக்கே காணிகள் கிழக்கு முதல்வர் அதிரடி

குச்சவெளி பகுதியில் காணிக்கச்சேரி மூலம் ஆவணங்கள் உறுதிப்படுத்தப்பட்ட மக்களுக்கு காணிகளை உடனடியாக வழங்குமாறு கிழக்கு மாகாண முதலவர் நஜீப் அப்துல் மஜீத் மாகாண காணி ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளார். புல்மோட்டை பிரதேசத்துக்குட்பட்ட மண்கிண்டி மலை தேத்தாவாடித்தீவு, வீரந்தீவு, பொன்மெலக்குடா மக்களின் காணிகள் தொடர்பாக கடற்படையினருக்கும் பிரதேச மக்களுக்கும் அடிக்கடி முறுகல் நிலை ஏற்பட்டு வந்த நிலையில் குறித்த பிரச்சினை தொடர்பாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர். ரம்ழான் முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்தே முதல்வரால் இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## புத்தரைப் பச்சைகுத்தியவர் திருப்பியனுப்பப்பட்டார்.

இலங்கைக்குச் சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வதற்காக பிரித்தானியாவிலிருந்து வருகை தந்த 24 வயதான இளைஞர் ஒருவர் தனது புஜத்தில் புத்தரின் படத்தை பச்சைகுத்தியிருந்ததை குடிவரவுத் துறை அதிகாரிகள் கண்டுபிடித்ததைத் தொடர்ந்து உடனடியாகவே பிரித்தானியாவுக்கு திருப்பியனுப்பப் பட்டுள்ளார். எனினும் அவர் இலங்கைக்குள் வரத்தடை விதிக்கப்பட்டதாக மட்டுமே குடிவரவுத் துறை கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அவரைத் திருப்பி அனுப்பவில்லை என்றும் மேலும் தெரிவித்தார். அவரது சுயபாதுகாப்பு தொடர்பாக இவ்வாறு செய்ததாக அவர் தெரிவித்தார்.

## கஞ்சா வியாபாரி கைது

மோட்டார் சைக்கிளில் ஐந்து கிலோகிராம் கஞ்சாவை எடுத்துச் சென்ற நபரொருவரை திருக்கோணமலை போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் ஐந்தாம் கட்டைப் பகுதியில் கைது செய்துள்ளனர். பிடிபட்ட நபர் மிக நீண்ட காலமாக கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தவர் என்பது பொலீஸின் மேலதிக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

## முஸ்லிம் எய்ட் நிறுவனத்தால் இரு நூல் நிலையங்கள் புனரமைப்பு

கந்தளாய் பேராற்று வெளி முஸ்லிம் மகாவித்தியாலயம் மற்றும் ஆயிஷா மகளிர் பாடசாலை ஆகியவற்றின் நூல் நிலையங்கள் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்பட்டு தளபாடங்கள் மற்றும் புதிய நூல்களின் வசதிகளோடு கல்விச் சமூகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பங்குனி மாதம் 12ம் திகதி இடம்பெற்ற இக்கையளிப்பு நிகழ்வில் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி, வலயக் கல்விப் பணிப்பாளர், கல்வி உத்தியோகத்தர்கள், ரெக்டோ அமைப்பின் ஊழியர்கள், அதிபர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.





## உ.வி.ப.மா.சங்கம் மற்றும் குருஷேஸ்த்ரா கல்வி வெளியீடு இணைந்து நடாத்திய இலவசக் கல்விக்கருத்தரங்கு

உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி பழைய மாணவர் சங்கமும் குருஷேஸ்த்ரா கல்வி வெளியீடும் இணைந்து நடாத்திய இலவசக் கல்விக் கருத்தரங்கு கடந்த ஞாயிறு உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

தரம் பத்து மற்றும் பதினொராம் தர உவர்மலை விவேகானந்தா கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்ட இக்கல்விக் கருத்தரங்கில் தமிழ், வரலாறு மற்றும் விஞ்ஞானப் பாடங்கள் முதலாம் தவணைப் பரீட்சையை மையமாகக் கொண்டு விளக்கமளிக்கப்பட்டன. கருத்தரங்கின் முழு அனுசரனையை குருஷேஸ்த்ரா கல்வி வெளியீட்டு நிறுவனமும் முழுமையான ஏற்பாட்டை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி பழைய மாணவர் சங்கமும் மேற்கொண்டிருந்தனர்.



## டெங்கு விழிப்புணர்வு வீதி நாடகம்

அட்டாளைச்சேனை கல்விக் கல்லூரி மாணவர்களின் டெங்கு விளிப்புணர்வு வீதி நாடகம் இவ்வாரம் திங்கட்கிழமையன்று கிண்ணியா நகரசபை முன்றலில் இடம்பெற்றது.

அதிகரித்துவரும் டெங்குப் பிரதச்சனையிலிருந்து விடுபடலுக்கான சூழல் சுத்தம், கழிவுப்பிரச்சனை உட்பட சிறுவர் கல்வி உரிமை சம்மந்தமான விழிப்புணர்வு நிகழ்வுகள் நிகழ்த்திக் காட்டப்பட்டன.

இச்செயற்பாட்டில் கிண்ணியா வலயக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் நகரசபை ஊழியர்கள் என பெரும்பாலானோர் வருகை தந்திருந்தனர்.



## இலவச மருத்துவ முகாம்

17.03.2013 அன்று கிண்ணியாவின் நகரபிதா டாக்டர். எம்.எம். ஹில்மி தலைமையில் இலவச மருத்துவ முகாம் இடம்பெற்றுள்ளது.

கிண்ணியாவின் பின்தங்கிய பகுதியான சம்மவச் தீவு பிரதேச மக்களுக்கு அல்ஸாபா வித்தியாலயத்தில் குறித்த மருத்துவ முகாம் இடம்பெற்றுள்ளது. இவ் இலவச மருத்துவ முகாமிற்கு அமானாதகாபுல் இன்சூரன்ஸ், ஹட்டன் நெசனல் வங்கி, சம்பத் வங்கி என்பன அனுசரணை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் சாதியத்தின் நிலை – 1960களில்



## சைவமும் தமிழும் தழைத் தோங்குக!

17-8-60 ல் திருகோணமலையைச் சேர்ந்த உப்பு வெளியில் அலஸ் தோட்டம் என்னும் கிராமத்தின் கிராமச்சங்க அங்கத்தவராக இருந்த திரு. வீ. கட்டையர் என்பவர் இறந்த அந்திய கருமாதிக்கு சைவசமய ஆசாரப்படி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கன்னியாய் வென்னீர் ஊற்றில் கருமாதி செய்ய திருகோணமலையில் உள்ள சைவக் குருமார் பலரிடம் மேல்குறிப்பிட்ட பெயர் வழிக்காரரின் கருமாதியை சைவசமய ஆசாரப்படி செய்யும் படி கேட்கப் பட்டபோது சாதிக் கட்டுப் பாட்டை முன்னிட்டு ஒருவரும் முன்வர மறுத்து விட்டார்கள் இதை அறிந்த சைவசமய குரு ஒருவர் மேற்படி கருமாதியை செய்ய முன்வந்தார் சைவசமய ஆசாரப்படி கன்னியாய் வென்னீர் ஊற்றில் மிகவும் சிறப்பான முறையில் நடாத்தப் பட்டது. இவர் இதை செய்ததிற்காக இவர் பூசை செய்யும் கோவில் முகாமைக் காரர் கோவில்களில் பூசை செய்யாமல் தடை செய்துள்ளார்கள் இது நீதியா!

திரு: வீ. கட்டையர் தமிழ் பேசும் மகனாக பிறந்தது குற்றமா? இவர் தமிழ் மகனாக பிறந்திரா விட்டால் இந் நிலை இவருக்கும் இவரின் கருமாதியை செய்த குருவுக்கும் கிடைத்திருக்குமா? கோவிலில் பூசை செய்ய தடையா? இது நீதியா அல்லது சைவசமய கோட்பாடா! சைவசமயம் அன்பின் மதம் என்பது பொய்யா? தீண்டாத சாதியாகப்பிறந்த பல பெரியார்கள் சிவபெருமானின் திருவருள் பெற்றது பொய்யா? உலகம் போற்றும் திருவள்ளுவர் ஒளவைமுதலிய பெரியார்கட்கும் அவர்களின் மணி மொழிகட்கும் இழுக்கு உண்டாக்கலாமா? இவர்களின் எண்ணத்துக்கும் இந்த இருபதாம் நூற்றுண்டில் திருகோணமலையில் வாய்ப்பூட்டுச் சட்டமா? சைவப்பெருங்குடி தலைவர்களே பொதுமக்களே! இந்த சைவசமய குருவின் துன்பக் கண்ணீரைத்துடைக்க முன் வந்து ஆவன செய்யும் படி. தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

வணக்கம்

19-8-60

உங்கள் நல்லெண்ணத்தை விரும்பும்
வ. நா. தம்பிராசா கி. ச. தலைவர் சாம்பற்றிவு
க. சி. சுப்பிரமணியம் கி.ச அங்கத்தவர்
நா. கந்தையா திவ்விய ஜீவன சங்கப் (சாம்பற்றிவு கிளை)

மனோரமா அச்சகம், திருமலை.

நன்றி. அண்ணல் (காலஞ்சென்ற) திரு. ந. தம்பிராசா அவர்கள்

# நிறைவேறியது அமெரிக்கத் தீர்மானம் இறுதி நேரத்தில் இந்தியா ஆதரவு

ஐ.நா மனிதவுரிமைப் பேரவையில் இலங்கைக்கெதிராக அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்ட பிரேரணையானது இருபத்தைந்து நாடுகளின் ஆதரவுகளுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இறுதிவரை 'மதில்மேல் பூனையாக' இருந்த இந்தியா தனது ஆதரவை இறுதியாக இப்பிரேரணைக்காக வழங்கியுள்ளது. இப்பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும், அதற்கும் மேலதிகமாக இலங்கையில் நிகழ்ந்த மனிதப் படுகொலைகள் தொடர்பாக சர்வதேச விசாரணையை நடாத்த வேண்டுமென இந்தியா வலியுறுத்த வேண்டும் என்றும் இந்திய மாநிலங்களில் ஒன்றான தமிழ் நாட்டில் உணர்வுபூர்வ போராட்டங்கள் வலுப்பெற்றுள்ள நிலையில் இந்தியா இப்பிரேரணையை ஆதரித்திருப்பது தமிழ் நாட்டின் போராட்டக்காரர்களுக்கு உந்துசக்தியாக இருக்குமென்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவினால் முன்மொழியப்பட்ட இத்தீர்மானத்திற்கு ஜேர்மன், அயர்லாந்து, இத்தாலி உள்ளிட்ட இருபத்தைந்து நாடுகள் ஆதரவளித்திருந்த போதும் பதின்மூன்று நாடுகள் எதிர்த்து வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஜப்பான், மலேசியா உள்ளிட்ட எட்டு நாடுகள் இவ்வாக்கெடுப்பின்போது அமைதியாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வாகனப் பதிவுக் கட்டணம் 200 தொடக்கம் 500 வீதத்தால் அதிகரித்தது

மோட்டார் வாகனங்களுக்கான பதிவுக்கட்டணம் சுமார் 200 வீதத்திலிருந்து 500 வீதமாக அதிகரித்துள்ளது. கடந்த மாதமளவில் மேற்கொள்ளப்பட்ட கட்டச் சீரமைப்பினாலேயே இந்நிலை எழுந்துள்ளது.

1600 சீ.சீ கொள்ளளவைக் கொண்ட மகிழுந்துகளுக்கான(கார்) கட்டணமும், இரு பயன்பாட்டு வாகனங்களுக்கான பதிவுக் கட்டணமும் ரூபா 5,000 த்திலிருந்து தற்போது 15,000 ஆக அதிகரித்துள்ளது. விசேட தேவை வாகனங்களுக்கான கட்டணங்கள் ரூபா 10,000 த்திலிருந்து 20,000 ரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே பாரஊர்திகளின் வால் வண்டிகளுக்கு (ரெயிலர்ஸ்) கட்டணங்கள் ரூபா 2,500 லிருந்து 7,000 ஆக அதிகரித்துள்ளது. உழவியந்திரப் பெட்டிகள் மற்றும் நீர்வண்டிகளின் கட்டணங்கள் 500 வீத அதிகரிப்பைப் பதிந்துள்ளது. அதன் படி 1,000 ரூபாவாக இருந்த அவற்றின் கட்டணங்கள் ரூபா 6000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டிகளின் கட்டணங்கள் 500 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு முறையே 2,000 ஆகவும் 2,500 ஆகவும் மாற்றமடைந்துள்ளன. மோட்டார் பாரஊர்திகள் மற்றும் டிப்பர் வண்டிகளின் கட்டணங்கள் ரூபா 10,000இல் இருந்து ரத்திலிருந்து 15,000 ஆக உயர்ந்துள்ளது. முதலுதவி வண்டிகளதும் அமரர் ஊர்திகளினதும் பதிவுக் கட்டணங்கள் ரூபா 10,000 ம் ஆகவே மாற்றமுறாமல் உள்ளன.

முன்னர் பதிவுக்கட்டணத்திற் சேர்க்கப்படாத வகைகளும் தற்போது சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1000 சீ.சீக்கு மேற்பட்ட கொள்ளளவைக் கொண்ட மகிழுந்துகளுக்கு பதிவுக்கட்டணமாக 20,000 ரூபா புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரபாகரனின் மகனை இலங்கை இராணுவம் கொல்லவில்லை
## – சரத் பொன்சேகா –





"விடுதலை புலித் தலைவர் பிரபாகரனின் இளைய மகன், பாலசந்திரனை நாங்கள் கொல்லவில்லை," என, இலங்கையின் முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இலங்கையில், 2009ல், விடுதலை புலிகளுடன் நடந்த சண்டையின் போது இராணுவ தளபதியாக இருந்த சரத் பொன்சேகா 2010ல், ஜனாதிபதி தேர்தலில், மகிந்த ராஜபக்சவை எதிர்த்து போட்டியிட்டதால், ஊழல் குற்றம் சாட்டப்பட்டு, 2 ஆண்டுகள் இராணுவ சிறையில் அடைக்கப்பட்டார்.

தற்போது புதிய கட்சி தொடங்கியுள்ள சரத் பொன்சேகா, கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் கூட்டத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

லண்டனை சேர்ந்த, தனியார் தொலைக்காட்சியில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின், 12 வயது மகன் பாலசந்திரன், துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்ட காட்சி ஒளிபரப்பானது. இந்த காட்சி ஜோடிக்கப்பட்டது.

பாலசந்திரன் பக்கத்தில் நிற்கும் வீரர் அணிந்திருக்கும் சீருடையை, எங்கள் இராணுவ வீரர்களுக்கு நாங்கள் வழங்கவில்லை. இந்த சீருடை, இந்தியா இராணுவத்தினர் அணிவது. இது போன்ற சீருடைகளை கள்ளத்தனமாக பயன்படுத்தி, விடுதலை புலிகள் இறுதி கட்ட சண்டையில், ஈடுபட்டனர்.

இலங்கை இராணுவம் பயன்படுத்திய பதுங்கு இடங்கள் மிகவும் சிறியவை. பாலசந்திரன் அமர்ந்திருக்கும் இடம், சுத்தமாகவும், பெரியதாகவும் உள்ளது. அது போன்ற பதுங்கு அரண்கள், இலங்கை இராணுவத்திடம் கிடையாது. எனவே, இந்த படம் போலியானது.

இலங்கை போர் தொடர்பாக, எந்த விதமான சர்வதேச விசாரணையையும் சந்திக்க தயாராக இருக்கிறேன். முன்னாள் தளபதி என்ற முறையில் எனக்கும் இந்த பொறுப்பு உள்ளது. இலங்கை அரசு, போர் குற்றம் தொடர்பான விசாரணையை சந்திக்க தயங்குகிறது. இறுதி கட்ட சண்டையின் போது என்ன நடந்தது என்பதை அறிய மக்கள் விரும்புகின்றனர்.

இந்த சந்தேகம் களையப்பட வேண்டும். போர் குற்றம் தொடர்பான விசாரணை சந்திக்க மறுத்தால், இலங்கை அரசு எதிர்காலத்தில், ஏராளமான சர்வதேச குற்றச்சாட்டுக்களை சந்திக்க வேண்டியிருக்கும் என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

## அறிவுக்களஞ்சியப் போட்டி..

பாடசாலை மாணவர்களின் அறிவுத்திறனை விருத்தி செய்வதற்காக பாடசாலை மாணவர்களுக்கிடையிலான அறிவுக் களஞ்சியப் போட்டியொன்றினை தரிசனம் தொலைக்காட்சி நடாத்தவுள்ளது. எதிர்வரும் 28.03.2013 அன்று கிறீன் வீதியிலுள்ள சன்சைன் கேட்போர் கூடத்தில் நிகழவுள்ள இந் நிகழ்ச்சிக்கு சர்வோதயம் முழு ஆதரவையும் வழங்குவது குறிப்பிடத்தக்கது.

வினாவிடைப் போட்டியாக நடைபெறவுள்ள இவ் அறிவுக் களஞ்சியப் போட்டியில் செல்வநாயகபுரம் இந்து மகாவித்தியாலயம், ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயம், லிங்கநகர் கோணலிங்க மகா வித்தியாலய மாணவர்கள் போட்டியிடவுள்ளனர்.




# இவரா அவர்?

இந்தியாவில் இரண்டு இலங்கை பௌத்த மதத் துறவிகள் தாக்குதலுக்குள்ளானதும் அதைத் தொடர்ந்து இந்தியாவிலுள்ள இலங்கையர்களுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

ஆனால் தஞ்சாவூரில் தாக்குதலுக்குள்ளான தேரரே தம்புள்ளையில் முஸ்லிம் பள்ளிவாசலை ஒரு மாதத்திற்குள் தகர்த்த வேண்டும் என்ற ஆர்ப்பாட்டத்திற்கு முன்னின்றவர் என்ற நிரூபிக்கப்படாத செய்தியொன்று இப்போது கசிந்திருப்பது பலருக்கு தெரிந்திருக்காது. அந்நிரூபிக்கப்படாத [illegible] முகப்புத் தளத்தில் இணைக்கப்பட்டுள்ள சலனப்பட ஆதாரங்கள் இதோ.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பலகாமம் த. வேலாயுதம்

# தம்பன் கோட்டை

பாகம் - 8

## வரலாற்று நாவல்

**சென்ற வாரம்...**
அவளைச் சந்திக்கும்போது முடிவொன்றைக் கேட்டுவிடுவதுதான் என்ற தீர்மானத்துடன் ஒரு முறை கோட்டைப் பாதுகாப்புக்களைப் பார்த்துவிட்டு நித்திரைக்குச் சென்றான் உதயகுமரன்.

உண்மையில் ஓரிரண்டு கிழமையிலேயே இருவரும் தயக்கமின்றி பேசிக்கொள்ளத் தலைப்பட்டனர். அபின் உண்டு பழகிய மயில் போல கோட்டைவாலிபன் அவன்தான் உதயகுமரன் குடமுருட்டியாறு வெண்மணல் பரப்பிற்கு நாளும் வரலானான். ஒரு நாள் ரங்கநாயகி வெண்மணல் பரப்பில் அவனோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, உங்களால் கல்யாணி ராகத்தைப் பாடமுடியுமா? என்று கேட்டான்.

ஓ ... பேஷாக ! என்றவள் தயக்கமின்றி ஆரம்பித்தாள்.என்ன ஆச்சரியம்! கூடவே ஒரு ஆண் குரலும் அவளோடு இணைந்து கொண்டது. தன் பாடலை நிறுத்தாமலே தலையைத் திருப்பி அவனைப் பார்த்தாள். சாட்சாத் அவனேதான் பாடிக்கொண்டிருந்தான். சாதாரணமாக அல்ல, ஒரு தேர்ந்த பாடகன்போல அழகாகப் பாடினான். அவன் குரல்கூட கரகரப்பில்லாமல் மதுரமாக ஒலித்தது. இது கண்டு போர்க்களங்களில் வாள் சுழட்டும் இவரும் நன்றாகப்பாடுகிறாரே... பாடலுக்கேற்றபடி குரலும் ஒன்றிப்போவது சிறப்பாக இருக்கிறது. என்று அதிசயித்தது மட்டுமல்ல, வாய்விட்டு பாராட்டவும் செய்தாள்.
அமர்க்களமாகப் பாடுகிறீர்கள்... இதுவரை என்னிடம் சொல்லவில்லையே.... எங்கே கற்றீர்கள் இந்த வித்தையெல்லாம்? என்று கேட்டு வைத்தாள்.

கலைவாணி போன்ற அவள், தன்பாடலைப் பாராட்டியதைப் பெரும்பேறாக எண்ணி மட்டில்லா மகிழ்ச்சியடைந்த அவன், தான் சிறிய தந்தையாருடன் தென்னிந்தியாவில் சில காலம் வாழ்ந்தபோது சிறு வயதில் சங்கீதம் கற்றுக் கொண்டதாகச் சொன்னான். சங்கீதத்தில் நல்ல ஆர்வம் போலிருக்கிறது... இல்லாது போனால் இப்படியொரு அழகு தேவதையை நான் சந்தித்திருக்கமாட்டேன். சந்தித்திருந்தாலும் பழக வாய்ப்புக் கிடைத்திருக்குமோ தெரியாது அவன் தன் உறவை எந்தளவு விரும்புகிறான் என்றறிந்த போது, மனம் அலைபாய்ந்தது. அவனே அவள் மன ஓட்டத்தை நிறுத்தினான். தங்களது தந்தையின் பெயர் என்ன....? தங்களின் பெயர் போன்ற விபரங்களை நான் அறிந்து கொள்ளலாமா? கேட்டு வைத்தான் குமரன்.

ஓ.... அறியலாமே! என்னுடைய பெயர் ரங்கநாயகி. எனது தகப்பனார் பிரபல நாதஸ்வர வித்துவான் வைத்திலிங்கம் பிள்ளை. எனது தாயாரின் மறைவுக்குப் பிறகு அவர் நாதஸ்வரம் வாசிப்பதே யில்லை...... என்று நிறுத்தினாள்.

நாதஸ்வர வித்துவானின் மகளா நீங்கள்?.. அதுதானே பார்த்தேன்... இராகங்கள் எப்படியடா உங்களோடு இத்தனை சரளமாக உறவாடுகிறது என்று எனக்குள் நானே யோசித்ததுண்டு. காரணம் இப்போதுதான் தெரிகிறது... அவனை இடைமறித்தாள் ரங்கநாயகி.

உங்களின் எல்லாத் திறமைகளும், பண்புகளும் எனக்கு இரட்டிப்பாய்ப் பிடிக்கிறது.. ஆனால்.. ஆனால்.. ஆனால்.. என்று ஏதோ என்னில் பிடிக்காத எதையோ ஒன்றைப்பற்றி சொல்ல வந்தீர்களே..?. அதை ஒளிவு மறைவின்றிக் கூறிவிடுங்கள் என்றான் அவன். அவனுக்குள் ஒரு கேள்விக்குறி. அவன் புத்திக் கூர்மையை உள்ளூர மெச்சிக் கொண்டவள், சாதாரண சிறு பெண்ணாகிய என்னை பெரிய போர்வீரராகிய தாங்கள்...: நீங்கள்... நீங்கள் என்று பெரும் கௌரவம் கொடுத்து அழைப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. கேட்கும்போது கூச்சமாக இருக்கிறது. சிணுங்கிக் கொண்டாள். நீங்கள் உங்களை சிறியவள் என்று எண்ணிக்கொண்டு இருக்கலாம். கலைவாணியின் அருளால் பெரிய சங்கீதப் பொக்கி'மே உங்களிடம் இருக்கிறது... சரி... சரி முறைக்க வேண்டாம்... உன்னை... இப்போது சம்மதம்தானே... உன்னை ரங்கநாயகி என்றே அழைக்கின்றேன்... சரிதானே? இருவரும் சிரிப்பில் கலந்தனர். சிறிதுநேரத்தின் பின் அவன் கேட்டான். அதுசரி... நான் ஏதோ அரையும் குறையுமாகத்தான் இராகங்களைப் பாட கற்றுக் கொண்டிருக்கிறேன். இப்போதுமட்டும் வாய்ப்புக் கிடைக்குமாக இருந்தால் உன் தந்தையாரிடம் சங்கீதம் முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புகிறேன். அந்த பெரியாரைச் சந்திக்க நான் வீட்டுக்கு வரலாமா...? உன்னால் ஏற்பாடு செய்து தரமுடியுமா?

அவள் பதிலுக்கு மௌனம் சாதித்தாள்... மனம்தான் பேசியது இதுக்குத்தான் நாளும் என்னைத் தேடிவந்ததும்... பாடச் சொல்லிக் கேட்டதும் போலிருக்கிறது அவள் உற்சாகத்தில் பாதி போய்விட்டது. அவள் சிந்தனையைக் கலைத்தது அவன் கேள்வி.
ஏன் மௌனம் சாதிக்கிறாய்?

அதற்கு என்னை காக்காய் பிடிக்கத்தேவையுமில்லை... அதற்குரிய அவசியமுமில்லை. நீங்களே நேரடியாக தகப்பனாரைக் கேட்பதுதானே அவள் தூக்கலாகச் சொன்னாள். அவள் குரல் அவளைக் காட்டிக் கொடுத்துவிட்டது. சிரித்துக் கொண்டே சொன்னான்...
அப்பா...போதுமே கோபம்...இங்கே இரகசியமாக சந்திப்பதைவிட வீட்டில் பெரியவர்களின் அனுமதியுடன் சந்திக்கலாமே என்றுதான் கேட்டேன்... இதற்குப்போய்... அவளுக்கு அசடு வழிந்தது. இருவரும் ஒருவரையொருவர் தெளிவாகத் தெரிந்து கொண்டாலும் தங்கள் உள்ளக் கிடக்கையை வெளிப்படையாகப் பேசத்தயங்கினர்.

இதற்கிடையில் அவர்களது சந்திப்பொன்றும் இரகசியமானதாக இருந்து விடவில்லை. கோட்டை வாலிபன் நெடுகிலும் அங்கு வருவதைக் கண்ட ஊரவர்கள் அந்த நேரத்தில் அந்த இடத்திற்குப் போவதை தவிர்த்துக் கொண்டார்கள். ஆனாலும் ஓரிருபேர் சிலவேளைகளில் அவர்கள் பேசிக் கொண்டு இருப்பதையும், பாடிக்கொண்டு இருப்புதையும் கேட்கவும் செய்தனர், காணவும் செய்தனர். அதுவும் ஆளையாள் மாறிமாறிப் பாடும்போது கேட்கக் காதுகள் கோடி வேண்டும் போல இருக்கும்.

தொடரும்...





# வரலாற்றில் திருக்கோணமலையல்ல: திருகோணமலையே வாழும்...

திருகோணமலை பற்றிய தகவல்களை எழுத்தில் பதிவு செய்யும் போது "திருகோணமலை" என்று எழுத வேண்டுமா அல்லது "திருக்கோணமலை" என்று எழுத வேண்டுமா என்பது திருகோணமலை கலை இலக்கிய வாதிகளிடையே வாதவிவாதத்திற்கு உரியதாக இருந்து வருகிறது. திருகோணமலை என்று எழுதவதையே பெருமையாக் கொள்ளும் தலைமுறை வளர்ந்து அதைபெருமையுடன் பின்பற்றிக்கொண்டு இருக்கின்றது. இதில் திருகோணமலை இந்துக் கல்லூரியின் பங்கு முக்கியமானது. இந்துக் கல்லூரியின் மாணவர்களே திருகோணமலையின் கலைஇலக்கிய நிர்வாகத்தில் முக்கிய பொறுப்புக்களில் இருப்பதால் "திருகோணமலை" எனப் பேசுவதுதான் சரியானது பெருமையானது என்றாகிவிட்டது.
கடந்த 2008ம் ஆண்டு மு.மயூரன் "திருகோணமலையும் திருக்கோணமலையும்'' என்ற பதிவை எழுதியிருந்தார். திருகோணமலை பெயர்க்காரணங்களை ஆராய்ந்துள்ளதுடன், திருகோணமலையை எழுதும் போது 'திரு'வுக்கும் 'கோணமலை' க்கும் இடையில் கண்டிப்பாக 'க்' போடவேண்டும் என்று கட்டாயப்படுத்துபவர்களது வாதங்களை நேர்மையான முறையில் முன்வைத்து தனது நிலைப்பாட்டையும் முன்வைத்திருந்தார். அப்பதிவில் நான் திருக்கோணமலை என்பதை மறுப்பதற்கு வலுவான சான்றுகள் வைத்திருப்பதாக என்னுடைய நிலைப்பாட்டை குறிப்பிட்டதுடன் என்னையும் பின்னூட்டமிட அழைத்திருந்தார். சோம்பல் காரணமாக அதற்கு இதுநாள்வரை முறையான பதில் எதையும் நான் எழுதவில்லை. அத்துடன் அந்த விடயம் சென்று விட்டது. தற்போது திருகோணமலை பற்றிய வரலாற்று நூல்களை வாசித்தபோது இந்த விடயம் ஞாபகம் வந்தது. அத்துடன் எனது பதிலையும் எழுதிவிடுகிறேன்.

"திருக்கோணமலை" என்பதை வலியுறுத்துபவர்கள் சொல்லும் காரணம் தமிழ் இலக்கணப்படி "திருக்கோணமலை'' என்று புணர்ந்து தமிழ்த் தன்மையயுடன் காணப்பட்டது. அது காலப்போக்கில் தமிழ்த்தன்மையை இழந்து "திருகோணமலை" ஆகிவிட்டது. தமிழ்களாகிய நாம் திருகோணமலையின் தமிழ் தன்மையை அடையாளப்படுத்த "திருக்கோணமலை" என்றே அழைக்க வேண்டும், திருகோணமலை என்பது தமிழ்த்தன்மைக்கு விரோதமானது என்பதே. மேலும் திருகோணமலையின் அடையாளமும் சிறப்பும் ''திருக்கோணேஸ்வரம்'' தான் ஆகவே கோணேசப் பெருமானின் தெய்வீகத் தன்மையைச் சேர்த்து திருகோணமலையின் சைவ/இந்து பாரம்பரியத்தையும் உறுதிப்படுத்த ''திருக்கோணமலை'' என்பதே ஏற்புடையது என்பதே.

"திருகோணமலை" என்பதை நாம் வலியுறுத்துவதற்குக் காரணம் வரலாற்று ரீதியானது. திருகோணமலையின் வரலாற்று தன்மை மறையாமல் காப்பது. மூவின மக்களும் வாழும் திருகோணமலையின் தன்மையை அப்படியே ஏற்றுக் கொள்வது என்பதாக அமையும். இதற்கு நாம் வரலாற்றுக் காலங்களில் திருகோணமலை எவ்வாறு அழைக்கப்பட்டு வந்திருக்கிறது என்று



திருக்கோணமலையை வலியுறுத்துபவர்கள் பிழையான வரலாற்றுத் தகவல்களை குறிப்பிடுகின்றார்கள் அவை வருமாறு..
10, 11 ஆம் நூற்றாண்டு சோழர்காலக் கல்வெட்டுக்கள்.
15 ஆம் நூற்றாண்டில் அருணகிரிநாதரால் பாடப்பட்ட திருப்புகழில் ''விலைக்கு மேனியில்'' என ஆரம்பிக்கும் திருப்புகழில் "திருக்கோணாமலை தலத்தாரு கோபுர" என்றும், "தொடுத்த வாளென" என்று ஆரம்பிக்கும் திருப்புகழில் "திருக்கோணாமலை தருக்குலாவிய" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஏனைய மொழி மொழிபெயர்ப்புக்கள்: ஆங்கிலத்தில் Trincomalee. "c" க்குப் பதிலாக "h" வந்திருக்க வேண்டும். சிங்களத்தில் "திருகுணாமலய". "கு" க்குப் பதிலாக "கோ" வந்திருக்க வேண்டும்.

கோணேசர் கல்வெட்டில் ''திருக்கோணமலை'' என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. (குளக்கோட்டன் காலம் சர்ச்சைக்குரியது. ஆகவே இது 11 அல்லது 13 ஆம் நூற்றாண்டுக்குரியது). 1889 இல் ஸ்ரீமான் வே. அகிலேசப் பிள்ளை அவர்கள் எழுதிய ''திருக்கோணாசல வைபவம்'' ஆகியவை ஆகும்.

வரலாற்றில் திருகோணமலை எவ்வாறு அழைக்கப்பட்டது என்பது பற்றிய முதலாவது தகவல் மகாசேனன் காலத்தில்தான் கிடைக்கிறது. மகாவம்சம் மகாசேனவின் ஆட்சிக் காலத்தில் மகாயன பௌத்தத்திற்கு ஆதரவாக ஏனைய மதங்க்ளுக்கெதிராக அவன் மேற்கொண்ட நடவடிக்கைகளில் அவனால் இடிக்கப்பட்ட விகாரைகளினுள் "கோகர்ணப் பிராமண விகாரை"யும் ஒன்று என்றுகூறுகிறது. மகாவம்சத்தின் உரை நூலான "மஹாவங்சதீக" இது பற்றிய தெளிவான குறிப்புக்களை தருகிறது. இது கோணேஸ்வரமே என்பதை வராலாற்றியலாளர் கலாநிதி. செல்லத்துரை குணசிங்கம் உறுதிப்படுத்தியுள்ளார்.

(இன்னும் நடுவோம்)

சத்தியன்

**சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்**
**குற்றங்கள் நிகழும் பொழுதில் அழையுங்கள் தொலைபேசி எண்**
**1929**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் உலக வலம்

## மீண்டும் பள்ளிக்குச் செல்லும் சிறுமி மலாலா



பெண்கல்விக்கு ஆதரவாகவும் தலிபானியர்களுக்கு எதிராகவும் கருத்து தெரிவித்ததால் துப்பாக்கி குண்டுகளுக்கு ஆளான சிறுமி மலாலா மீண்டும் பள்ளிக்கூடம் சென்றார்.

பாகிஸ்தான் பிரஜையான இவர், படுகாயமடைந்து பிரிட்டனில் சிகிச்சை பெற்று கடந்த மாதங்களில் வீடு திரும்பினார். இந்நிலையில் பூரண குணத்தோடு பள்ளிக்கு திரும்பியுள்ளார். மீண்டும் பள்ளிக்கு செல்லும் எனது கனவு நிறைவேறியுள்ளதால் பேரானந்தம் அடைகிறேன். இந்த அடிப்படை வாய்ப்பை உலகில் உள்ள எல்லா பெண்களும் பெற வேண்டும் என விரும்புகிறேன் என சிறுமி மலாலா தெரிவித்துள்ளார்

## பிரான்சிஸ் என்ற பெயரை தெரிவு செய்தது ஏன்?

### – போப் விளக்கம் –

ஏழைகளை நேசித்த மத குரு பிரான்சிஸ் நினைவாகவே அந்தப் பெயரைத் தெரிவு செய்தேன் என்று புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள போப் தெரிவித்துள்ளார். கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் 266வது போப்பாக அர்ஜெண்டினாவைச் சேர்ந்த ஜார்ஜ் மேரியோ பெர்கோக்லியோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இவர் "போப் பிரான்சிஸ்" என அழைக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது இது குறித்து அவர் கூறியதாவது: 12 - 13ஆம் நூற்றாண்டில் இத்தாலியின் அஸிஸி பகுதியில் வாழ்ந்த மதகுரு பிரான்ஸிஸ், ஏழைகளிடம் மிகுந்த அன்பு காட்டினார். அமைதியின் பிரதிநிதியாக விளங்கினார். ஆகவே, அந்தப் பெயரை தெரிவு செய்தேன் எனத் தெரிவித்துள்ளார்.



## பாராளுமன்ற தேர்தலில் பர்வேஸ் முஷாரப்

கடந்த 2008-ம் ஆண்டு பாகிஸ்தான் முன்னாள் அதிபர் பர்வேஸ் முஷாரப் துபாய் மற்றும் லண்டனுக்கு நாடு கடத்தப்பட்டார்.

கடந்த 4 ஆண்டுகளாக வெளி நாடுகளில் தங்கியிருந்ததோடு




அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் என்ற கட்சியை தொடங்கினார். இந்த நிலையில், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் 5 ஆண்டு கால ஆட்சி முடிவடைந்ததை தொடர்ந்து தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

இதையடுத்து வருகிற மே மாதம் பாராளுமன்ற தேர்தல் நடக்கிறது. அதில் போட்டியிட வசதியாக வருகிற 24ம் திகதி முஷாரப் மீண்டும் பாகிஸ்தான் திரும்பிய அன்றே விமானம் மூலம் கராச்சி வந்து அவரது கட்சியினர் 50 ஆயிரம் பேர் பங்கேற்கும் பேரணியில் கலந்து கொள்கிறார்.

## ஓரினச் சேர்க்கைக்கு கிளாரி கிளின்டன் ஆதரவு

அமெரிக்காவின் ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணத்திற்கு அந்நாட்டு முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் கிளாரி கிளின்டன் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில் ஓரினச் சேர்க்கையாளர்களும் அமெரிக்கர்கள்தான் அவர்களுக்கும் இந்நாட்டில் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. எனவேதான் சமவுரிமையின் அடிப்படையில் இவர்களுக்கு நான் ஆதரவு அளிக்கிறேன் என்று கூறியுள்ளார். இதே வேளை அமெரிக்காவின் ஓரினச் சேர்க்கை சட்ட மசோதாவை முன்னாள் அமெரிக்க அதிபர் கிளின்டனே தள்ளுபடி செய்தார் என்பதும் இவர் கிளாரியின் கணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## இளவரசி டயானாவின் ஆடைகள் 862000 பவுண்டுகளுக்கு ஏலம்

இங்கிலாந்து இளவரசர் சார்லசின் மனைவியான மறைந்த இளவரசி டயானாவின் ஆடைகள் எண்ணூறாயிரத்து அறுபத்து இரண்டாயிரம் பவுண்டுகளுக்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளது.

உலகின் புகழ்பெற்ற பெஷன் டிசைனர்களால் வடிவமைக்கப்பட்ட இந்த ஆடைகள் ஒவ்வொன்றும் தனித்தனியாக ஏலம் விடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 07

பிரதீபா

1. வீட்டுத் தோட்டமொன்றில் ஒரு பயிரை நடுதல் தொடர்பான தகவல்கள் ஒழுங்கின்றி தரப்பட்டுள்ளன.
   அ. தினமும் பாத்திகளுக்கு நீரூற்றல்
   ஆ. நிலத்தை உழுது பண்படுத்தல்
   இ. வித்துக்கள் முளைத்து நன்றாக வளருதல்
   ஈ. பாத்திகளை தயார்படுத்தல்.
   உ. வித்துக்களை பாத்திகளில் நடுதல்
   இதனை ஒழுங்கு வரிசைப்படி காட்டுவது எது?
   1. ஆ,ஈ,இ,அ,உ  2. ஆ,ஈ,உ,அ,இ  3. ஈ,ஆ,இ,உ,அ
2. பொதி செய்யப்பட்ட உணவு வகை, மருந்து வகை அடங்கிய பொதியினுள்ளே, வளியிலுள்ள நீராவியை உறிஞ்சுவதற்காக இடப்பட்டிருக்கும் சிறு பைக்கட்டினுள் காணப்படும் பதார்த்தம் எது?
   1. சிலிக்கா ஜெல்  2. நீராவி உறிஞ்சி  3. சுண்ணாம்பு
3. நீண்ட நாட்கள் வாடாத, வாசனையற்ற பூ பின்வருவனவற்றுள் எது?
   1. கொடி மல்லிகை  2. செவ்வந்திப் பூ  3. கடதாசிப்பூ
4. மின்காந்தம் பயன்படுத்தப்படும் மின்சாதனம் பின்வருவனவற்றுள் எது?
   1. மின்மணி  2. பாரம் தூக்கி  3. மின் அடுப்பு
5. இடி மின்னலுடன் மழை பெய்யும் போது, பாதுகாப்புக்காக பின்பற்ற வேண்டிய நடவடிக்கை எது?
   1. வீட்டினுள்ளே இருத்தல்
   2. மின் சாதனங்களின் பாவனையை தவிர்த்தல்
   3. குளம், நீச்சல் தடாகம் என்பவற்றில் நீந்துதல்
6. மிண்டி வேர் எனும் விஷேட வேரைக் கொண்ட தாவரம் எது?
   1. குருவிச்சை  2. இறுங்கு  3. அரசு
7. மாடுகளின் வால், முதுகுகளில் ஒட்டியபடி பரம்பலடையும் தாவர வித்து எது?
   1. குண்டுமணி  2. நாயுண்ணி  3. நாயுருவி
8. கசப்புச் சுவையுடைய இலை எது?
   1. குறிஞ்சா  2. குமுட்டி  3. பசளை
9. கொத்தாக பூக்கும் தாவரம் எது?
   1. ரோசா  2. அந்தூரியம்  3. சூரியகாந்தி
10. பூச்சியுண்ணித் தாவரங்கள் பூச்சிகளை பிடித்து உண்ணுவதற்கு காரணம் எது?
    1. தாவர உணவை உண்பதற்காக
    2. பூச்சிகளைப் பிடித்து உண்பதால் பூச்சிகளைக் கொல்லுதல்
    3. பூச்சியை சமிபாடடையச் செய்து நைதரசனை பெற
11. பின்வரும் பூக்களிடையே வேறுபட்ட பூ எது?
    1. தாமரை  2. ரோசா  3. எக்சோரா
12. ஒருவருக்கு ஒரு குளவி கொட்டினால் செய்யக் கூடிய முதலுதவி எது?
    1. கொடுக்கை அகற்றிய பின் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்
    2. கைமருந்தை காயத்தின் மீது பூசுதல்
    3. கொடுக்கை அகற்றிய பின் கைமருந்தை பூசுதல்
13. “மாம்பட்டை மருதம்பட்டை வெளவாலோடிய தென்னம் பட்டை......” என்ற கிராமிய பாடலுடன் தொடர்புடைய விளையாட்டு எது?
    1. சடுகுடு  2. கிட்டிப்புள்  3. கபடி
14. உலகின் முதலாவது .................... ஸ்புட்னிக் ஆகும்.
    1. சேர்க்கைக் கோள்  2. செயற்கைக் கோல்  3. செயற்கைக் கோள்
15. சுதன் தனது வீட்டிலிருந்து மேற்குத் திசை நோக்கி 200மீ தூரம் சென்ற பின், வடக்கு நோக்கி திரும்பி 100மீ சென்றான் இதன் பின் கிழக்குத் திசை நோக்கித் திரும்பி 500மீ தூரம் சென்று பாடசாலையை வந்தடைந்தான் எனில், சுதனின் வீடு பாடசாலைக்கு எத்திசையில் உள்ளது?
    1. மேற்கு  2. வடகிழக்கு  3. தென்மேற்கு
16. நிமலனின் வீட்டிற்கும் மக்கள் வங்கிக்கும் இடையிலான தூரம் 1500மீ ஆகும். இத்தூரத்தில் 2/5 பகுதியை நடந்தும், மீதித் தூரத்தை சைக்கிளிலும் சென்றான். எனில் அவன் நடந்து, சைக்கிளில் சென்ற தூரங்கள் முறையே?
    1. 300மீ, 900மீ  2. 600மீ, 900மீ  3. 900மீ, 600மீ
17. ஒரு நீளமான வாங்கில் சில மாணவர்கள் அமர்ந்துள்ளனர். இதில் குமார் முன்னாலிருந்து ஐந்தாவதாக அமர்ந்துள்ளான். பின்னாலிருந்து கணக்கிடும் போது மூன்றாவதாக அமர்ந்துள்ளான் எனில், வாங்கில் அமர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?
    1. 7  2. 8  3. 6
18. இலக்கம் 2, இலக்கம் 4 எழுதப்பட்ட எண் அட்டைகள் ஒரு பெட்டியினுள் இருந்தன. எண் அட்டைகளிலுள்ள எண்களின் கூட்டுத்தொகை 36 ஆகும். எண் அட்டைகளை எண்ணிய போது 12 இருந்தன. இதில் இலக்கம் 2, இலக்கம் 4 கொண்ட அட்டைகளின் எண்ணிக்கைகள் முறையே
    1. 5, 7  2. 7, 5  3. 6, 6

பெயர்: ..............................................................
..............................................................
முகவரி: ..............................................................
..............................................................
..............................................................
பாடசாலை: ..............................................................

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவும் இலங்கையும் வென்ற ஜெனீவாப் பிரேரணை

- மாயன் -

ஜெனீவாவில் மனிதவுரிமைச் சபையில் இலங்கைக்கு எதிரான பிரேரணையைக் கொண்டு வந்த அமெரிக்கா அதனை வெற்றியடையச் செய்தும் உள்ளது. இப் பிரேரணையினை அமெரிக்கா சமர்ப்பித்திருந்ததால் அதனை கண்மூடிக் கொண்டு எதிர்ப்பதற்கும் அதே போல ஆராய்ந்து ஆதரிப்பதற்கும் நாடுகள் அணிகளாகப் பிரிந்து விட்டன. எனினும் ஒரு நாடு தனது உள்நாட்டு நிலையினைப் பற்றிச் சிந்தித்து ஆதரித்து வாக்களித்திருந்தது. அந் நாடு இந்தியாவே.

கடந்த 2012ல் நடந்த வாக்களிப்பில் ஆதரவு 24 நாடுகளாகவும், எதிர்ப்பு 15 நாடுகளாகவும் மௌனித்திருந்த நாடுகள் 8 ஆகவும் காணப்பட்டன. இம்முறை ஆதரவு 25 நாடுகளாகவும், எதிர்ப்பு 13 நாடுகளாகவும் மௌனித்திருந்தவை 8 நாடுகளாகவும் உள்ளன. 47 உறுப்புரிமை நாடுகளைக் கொண்ட ஐநாவின் மனிதவுரிமைச் சபையில் (ம.உ.சபை) இம்முறை வாக்கற்றிருந்த நாடு கபொன் ஆகும்.

அமெரிக்க முன்மொழிவுகள் முதல் முறை ஐநாவின் ம.உ.சபை யின் அங்கத்துவ நாடுகளின் கலந்தாலோசிப்புக்களுக்காக முதலில் மாதிரிப் பிரேரணையாக வெளிவிடப்பட்டிருந்தன. பின்னர் அங்கத்துவ நாடுகளினால் கலந்தாலோசிக்கப்பட்ட மாற்றங்களுடன் இறுதிப் பிரேரணை தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டதன் பின்னர் நிறைவேறியுள்ளது.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டு மனிதவுரிமைச் சபையினால் போட்டியின் பேரில் மேலதிக வாக்குகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இந்த பிரேரணையும் இலங்கையின் மனிதவுரிமை மீதான பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு அவற்றை மேம்படுத்த இலங்கையே தன்னிச்சையாக முன்வர வேண்டும் என்ற அடிப்படை நாதத்தையே தனது அனைத்து முன்மொழிவுப் பதங்களிலும் கொண்டுள்ளதை புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

மீள் குடியேற்றம் மற்றும் கண்ணிவெடியகற்றல் ஆகிய விடயங்களில் இலங்கை அரசின் செயற்பாட்டை முன்மொழிவின் பதங்களில் ஒன்று பாராட்டியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் ஏனைய அனைத்து விடயங்களிலும் இலங்கையின் மீது அழுத்தங்கள் எவற்றையும் பிரயோகிக்காதவாறு வார்த்தைப் பதங்கள் இம் முன்மொழிவுகளில் பாவிக்கப் பட்டுள்ளமையானது அமெரிக்க முன்மொழிவுத் தயாரிப்பின் போது மிகப் பெரிய அழுத்தங்களை அந்நாடு எதிர்கொண்டுள்ளது என்பதை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளதைக் காணலாம்.

ஏனெனில் முதலாவதாக அமெரிக்கா வெளியிட்டிருந்த மாதிரிப் பிரேரணையிலிருந்து நீக்கப்பட்டுள்ள வார்த்தைப் பிரயோகங்களைப் பார்க்கும் போது அவற்றை நீக்குவதற்கு கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டிருக்க வேண்டும் என்னும் எண்ணமே மேலோங்கி நிற்கின்றது. அவ்வாறு நீக்கப்பட்டுள்ள அல்லது மாற்றப்பட்டுள்ள சொற்பதங்களைப் பார்ப்போமானால் :

மாற்றங்கள்:

1. வெளியக விசாரணை என்னும் பதம் உள்ளக விசாரணை என மாற்றப்பட்டுள்ளது

2. வலியுறுத்துகின்றோம் என்னும் சொல் ஊக்கப்படுத்துகின்றோம் என மாற்றப்பட்டுள்ளது.

நீக்கங்கள்:

3. பொருத்தமான சர்வதேச விசாரணை என்னும் வாக்கியம் நீக்கப்பட்டுள்ளது

4. வெளியக விசாரணையாளர்கள், நிபுணர்களுக்கு தடைகளற்ற அனுமதியினை வழங்க வேண்டும் என்னும் வாக்கியம் நீக்கப்பட்டுள்ளது.

சேர்ப்புக்கள்:

5. மீள்குடியமர்வு அடிக்கட்டுமானவிருத்தி, கண்ணிவெடியகற்றல் போன்றவை தொடர்பான இலங்கையின் செயற்பாட்டை அங்கீகரித்து வரவேற்கின்றோம் என்னும் வாக்கியம் முழுதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

எனவே ஐ.நா ம.உ.சபை முன்மொழிவுகள் மீளவும் இலங்கை அரசிற்குக் கால அவகாசத்தை வழங்கியுள்ளன என்பதாக அமைந்துள்ளது. அவ்வாறாயின் அமெரிக்கப் பிரேரணை நீர்த்துப் போய்விட்டதா என்னும் கேள்வி எழுகின்றதல்லவா? இங்குதான் மாதிரிப் பிரேரணையிலிருந்து மாற்றங்களுக்கு உள்ளாகி உருவாகிய புதிய பிரேரணையானது உட்கிடையான சில விடயங்களைக் கொண்டிருப்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

அதனில் ஒன்று இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்பதைக் கொள்ளலாம். இவ்வாறு இலங்கை நல்லியக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற முற்படும் போது 'சுதந்திரமான உள்ளக விசாரணைகளை' இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு சுதந்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை சாவதேசச் சமூகத்திற்குத் தெரியத்தக்கதான வெளிப்படைத் தன்மையை அச்சுதந்திர விசாரணைகளில் இலங்கை பின்பற்ற வேண்டும். இங்கு தான் இலங்கை ஒரு பொறிக்குள் விழுந்து விடும் போல இருக்கின்றது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் சுதந்திரமான உள்ளக விசாரணைகளை மேற்கொளளத் தேவைப்படுத்தப்பட்டுள்ள விடயங்களில் முக்கிய மூன்று பெருங் கொலைகளும் முறையே இறுதிக் கட்டப் போரின் போதான பொது மக்கள் படுகொலைகள், திருகோணமலையின் இரண்டு படுகொலைகளான திருமலைக் கடற்கரை மாணவர் படுகொலைகளும் திருமலை மூதூர் தன்னார்வத் தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேரின் படுகொலைகளுமே. இதைத் தவிரவும் கடத்தல்கள், கட்டாயப்படுத்தப்பட்டுக் காணமற் போகச் செய்யப்பட்டவர்களின் தனித்தனி விசாரணைகளும் அடங்குகின்றன.

எனவே இங்கு 'சுதந்திரமான உள்ளக விசாரணை' என்பதும் அதன் வெளிப்படைத் தன்மை என்பதும் இலங்கை அரசைப் பொறுத்தவரை சாத்தியப் படக்கூடிய விடயங்களாக இல்லை. ஏனெனில் சுதந்திர உள்ளக விசாரணையினை இலங்கை இறுதிப் போர்ப் படுகொலைகளின் மீது நிகழ்த்துமாயின் அங்கு குற்றஞ் சாட்டப்படப் போகின்றவர்கள் இராணுவ உயர்மட்ட [illegible] மேஜர் ஜெனரல் மற்றும் பிரிகேடியர் தர அதிகாரிகளாக இருப்பர். அவர்களை குற்ற விசாரணையின் முன் நிறுத்துவதென்பது இலங்கையின் அரச தலைவர்களையே குற்ற விசாரணையின் முன் நிறுத்துவதற்குச் சமமானதாகும். எனவே எச் சந்தர்ப்பத்திலும் உள்ளகச் சுதந்திர விசாரணை என்பது சாத்தியப் படாமலே போய்விடும் வாய்ப்புக்களே உள்ளன.

அடுத்து தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள பிரேரணையின் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ள விடயம் யாதெனில் முன்மொழியப்பட்டுள்ள விடயங்களில் இலங்கையின் நடவடிக்கைகள் தொடர்பான வாய்மொழிமூல அறிக்கையை மனிதவுரிமை உயர் ஆணையர் அடுத்த மனிதவுரிமைக் கூட்டத்தொடரில் (மார்ச் 2014ல்) வழங்க வேண்டும் என்பதுடன் அதற்கும் அடுத்த கூட்டத் தொடரில் இறுதி அறிக்கையை மனிதவுரிமை உயர் ஆணையரே தாக்கல் செய்ய வேண்டும் என்பதும் இரண்டாவது உட்கிடையான விடயம் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

ஏனெனில் இவ் இரண்டாவது உட்கிடையான விடயம் இலங்கைக்குள் மனிதவுரிமை நிபுணர்களை வர வழிவகுக்கும் வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது. எவ்வாறெனில் 2014ன் கூட்டத் தொடரில் மனிதவுரிமை ஆணையர் தமது அறிக்கைகளை எவ்வாறு தயாரிக்க வேண்டுமெனில் "இப்போது முன்வைக்கப்பட்டுள்ள செயற்படுதல் தொடர்பாக ஆராயும் அதிகாரம் கொண்டவர்களிடமிருந்து உள்ளீடுகளைப் பெற்று" த்தான் அவ் அறிக்கைகளைத் தயாரிக்க வேண்டியிருக்கும். அவ்வாறு அதிகாரம் பெற்றவர்கள் யார் என்பது இங்கு கேள்விக் குறியே. முன்மொழிவுகள் இலங்கையையும் சார்ந்த வகையில் தயாரிக்கப்பட்டிருப்பதால் அவ்வாறு ரோயும் அதிகாரம் பெற்றவர்களுள் இலங்கை அரசின் பிரதிநிதிகளும் உள்வாங்கப்படும் சாத்தியங்கள் இருக்கின்ற போதிலும் இலங்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு நிபுணர்களும் இவ்வதிகாரம் பெற்றவர்களுள் உள்வாங்கப்படும் சாத்தியம் காணப்படுகின்றது.

எனவே வெளிநாட்டு நிபுணர்கள் உள்நாட்டில் எவ்வாறு மனிதவுரிமை விருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை ஆராய அனுமதிக்கப்படுவர் என்பதாலேயே இவ் விடயம் பிரேரணைகளில் வெளிப்படையாகக் குறிப்பிடாவிட்டாலும் உட்கிடையாக செருகப்பட்டுள்ளதாகக் கொள்ளலாம்.

இறுதியாக இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளதால் அமெரிக்கா தனது முயற்சியில் வென்றுள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளும் நாம் இலங்கையும் இவ் விடயத்தில் வெற்றிபெற்றுள்ளது என்பதையே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் "சுதந்திரமான சர்வதேச விசாரணை" என்ற வார்த்தையையும் , இனக்கருவறுப்பு (இனப்படுகொலை) என்ற வார்த்தையையும் பிரேரணைச் சரத்துக்களில் இடம்பெறாமல் தடுத்திருப்பதுடன் எந்தவித நேரடி அச்சுறுத்தலையும் பெறாமல் மேலும் இரு வருட கால தயைநாட்களைப் பெற்றுக் கொண்டிருப்பது வெற்றிதானே? [illegible] கட்டப்பட்டுள்ள [illegible] கூடிச்செல்கின்றது. கட்டு இன்னும் அவிழ்க்கப்படவில்லை.....

## ஓர் இராணுவச் சிப்பாயின் ஏக்கம்

போராடும் வேளை வந்தது
அம்மா தந்த முத்தங்கள் மறந்து போயின!
அப்பாவோடு தனித்திருந்த இனிய சுகங்களும்
வெறுத்து ஓடின...!
இந்தப் போராட்டம் எனக்கும் பிடிக்கவில்லை
இருந்தும்
என் வீட்டு அடுப்பங்கரைப் பூனைகளை
கல் எறியும் ஒரு தருணம்
எனக்கும்
ஒரு சந்தர்ப்பமாய் வந்தவேளை
இராணுவ சிப்பாய்
எனும்
தொழில் பிடித்து வந்தேன் நான்...!
வண்டி இழுத்து... வண்டி இழுத்து...
மூட்டை சுமந்து...
முதுகு கூனிவிட்ட அப்பா...!
நாலு மைல் தூரம் கால் வலிக்க நடந்து
நாற்று நட்டு வரம்புவழி நீர் பாய்ச்சி
நாலு காசு சம்பாதிச்சு வந்து
சோறு காய்ச்சித் தந்த அம்மா...!
வயதுக்கு வந்து பத்து வருடங்களாகி வந்தன
கல்யாண வரனின் வரவு பார்த்து நாளும்
பெருமூச்செறியும் ஆசைத் தங்கைகள் இருவர்...!
தோள்களில் துப்பாக்கி கனக்க மனதும் இறுகி
வலித்தது!
காட்டிலும் மேட்டிலும் மழையிலும் வெயிலிலும்
நாடு காக்கும் போர் வீரன் எனும்
ஒரு போர்வை உடுத்தவனாய் நானும்...!
இன்றும்
அந்த அழகிய வல்லைவெளியின் வெயில்
குளித்தபடி எனக்கான இடத்தில் நான் மட்டும்
தனியனாய் நின்றபடி...
கையில் இருக்கும்
இரும்புக் குழல் துப்பாக்கியும்
ஊமல் வடிவக் குண்டுகள் சிலவும்...
இரவானால் வல்லை முனியப்பரும்
துணையாய் என்னுடன் இருப்பர்!
வல்லை வெளியில்
நிறை வாகனங்கள் குறைவின்றிச் செல்லும்!
கணவன் - மனைவி
காதலன் - காதலி
அப்பா - மகன்
அண்ணன் - தங்கை என்றெல்லாம்
உறவுகளின் ஊர்வலங்கள்
என் கண்களைத் தைக்கும்
கன்னங்கள் வழி கண்ணீர் சிதைக்கும்!
மீண்டும் மீண்டும் கொஞ்சும் உறவுகளுக்காய்
அதையே
ஊன்றி நினைக்கும் என் அனாதை
நினைவுகள்...!
எத்தனை காலங்களுக்கு லீவு கேட்டு எழுதி
நீண்டு காத்திருக்க முடியும் என்னாலும்!
எனக்கு என்று அப்பா இல்லையோ!
எனக்கு என்று அம்மா இல்லையோ!
எனக்கு என்று சோதரரும் இல்லையோ!
சுகங்களை எனக்குள் அள்ளிக்குளித்து
ஊக்கமுடன் ஆக்கித் தரும்
அறுசுவை உணவுகளை அள்ளித்தீத்தி
அயல் உறவுகளின் பாசத்தில் தளையவும்
ஒரு நாள் லீவு கூட எனக்கு இல்லையோ!
அங்கே பாருங்கள்
அவர்கள் மட்டும் அழகாய் வருகிறார்கள்
அவர்கள் மட்டும் உல்லாசமாய் உறங்குகிறார்கள்
வாகனங்களில் வரிசை கட்டிப்
பயணிக்கிறார்கள்
நான் மட்டும்
அதே துப்பாகியினையும்
ஊமல் வடிவக் குண்டினையும்
கட்டி அணைத்துச் சுமந்தபடி...
உச்சி வெயில் பட்டு
என் மண்டை ஓடும்
வெப்பமாகிப் பிளவுபடுகிறது!
நன்றாக வேர்த்துக் கொட்டி
என் நெஞ்சோரம்
சிற்றருவி ஒன்று முளைத்தது போல்
உழன்றுவிடுகிறேன்
சுகங்கள் அனைத்தையும்
கட்டிக் காத்து அனுபவித்து
நாளும் சுகம் கொள்ளும்
அதிகாரியின் திடீர் வரவு
கண்களுக்கு காட்சி தரும்...!
என் கால்கள் நேராய் நிமிர்ந்து அருகி வரும்!
கீழ் நோக்கி நேராய் நிமிர்ந்தபடி
உடலோடு ஓரம் விடும் இடது கரம்!
என் கன்ன ஓரம் தொட்டு
உள்ளங்கை காட்டி
உறுதியாய் மரியாதை தரும் வலது கரம்!
முகம் எல்லாம் பல்லாகச் சிரித்தபடி அதிகாரியும்!
இன்னும் வெயிலில் தோய்ந்து குளித்தபடி
ஏங்கிப் பெருமூச்செறியும்
உறவுகளுக்கான அழகிய என் நெஞ்சு!

சீனா. உதயகுமார்

நன்றி - காற்றுவெளி இணைய இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேந்திர நிலையமாகும் திருகோணமலை..

அரசின் சிரேஷ்ட அதிகாரியொருவர் இவ் விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டபோது ஐ.ஓ.சி நிறுவனம் சட்டவலிதான ஒப்பந்தம் ஏதுமின்றியே களஞ்சிய வசதியைப் பயன்படுத்தி வருகின்றது என்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் இலங்கைச் சந்தைக்குள் எண்ணை வியாபாரம் செய்ய நுழைந்த இந்திய எண்ணை நிறுவனத்திற்குக் களஞ்சிய வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் திருமலை சீனன்குடா எரிபொருட் களஞ்சிய சாலையின் சில குதங்களை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்திய நிறுவனத்திற்கு எழுத்தாலான ஒப்பந்தங்கள் எதனையும் ஏற்படுத்தாமல் வழங்கியிருந்தது. அரசிற்கு சொந்தமான இந் நிலப்பரப்பை ஐ.ஓ.சிக்கு வழங்கும் அதிகாரம் இ.பெ.கூட்டுத்தாபனத்திற்கு இல்லை என்பதால் பிரச்சனைகள் எழுந்துள்ளன. இதனை முன்னுணர்ந்துள்ள இந்திய எண்ணை நிறுவனம் இவ்விடயம் தொர்பாக இலங்கையுடன் ஒப்பந்தமொன்றை உருவாக்கிக் கொள்ளப் பகீரத முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

எனினும் திருமலையின் ஆசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடம் மற்றும் எண்ணைக் குதங்களின் வாடகைப் பெறுமதி என்பவற்றைக் கருத்திற்கொள்ளும்போது இவ்வாறான ஒப்பந்த விடயங்களில் கடும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று இலங்கை தற்போது விரும்புவதாக தெரிகின்றது. அதனால் ஐ.ஓ.சிக்கு வழங்கப்பட்ட தாங்கிகளை மீளப்பெறும் முயற்சிகளிலும் இலங்கை அமைச்சரவை இறங்கியுள்ளது. அதற்கான அமைச்சரவைப் பத்திரமொன்று மிக விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

சம்பூர் அனல் மின் நிலையப் பணிகளின் தொடக்கம் பல ஆண்டுகளாகப் பின்தள்ளப்பட்டுள்ள நிலையில் தற்போது இலங்கை மின்சார சபைக்கும் இந்திய நீராவி மின்வலுக் கூட்டுத்தாபனத்திற்கும் இடையே கடுமையான முறுகல் நிலை தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா மனிதவுரிமைச் சபையில் ...

சபையின் 22வது கூட்டத்தொரில் வைத்தியர் திரு. மனோகரன் பேசியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நாவின் மனிதவுரிமைக் கூட்டத்தொடரின் 22வது அமர்வுகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் கடந்த 15ம் திகதி இவரது தனிநபர் உரை நிகழ்ந்துள்ளது. 2006ம் ஆண்டிலிருந்து தற்போதுவரை தனது மகனின் மரணத்திற்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த முடியாதுள்ளது என்பதால் சர்வதேச விசாரணையினை மனிதவுரிமைச் சபையின் ஊடாக மேற்கொண்டு தனக்குரிய நியாயத்தைப் பெற்றுத் தரும்படி கலாநிதி அங்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனவரி 02, 2006ல் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் மாணவர்கள் ஐந்து பேர் திருகோணமலைக் கடற்கரையில் வைத்து சுட்டுக்-கொள்ளப்பட்டு இருந்தனர். இம் மரணம் உலகம் முழுவதும் பரவியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அன்றிலிருந்து தனது மகனின் மரணத்திற்குக் காரணம் இலங்கைப் படையினரே என்றும். அதற்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் வைத்திய கலாநிதி மனோகரன் பல முயற்சிகளில் ஈடுபட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.

அரசினால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவும் இக் கொலைகள் தொடர்பாகப் பூரண விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என்ற பரிந்துரையை வழங்கியுள்ளது. கடந்த வருடங்களில் இலங்கை அரசு இக் கொலைகள் தொடர்பாக விசாரணை நடாத்தப்படும் எனப் பல தடவை தனக்கு உறுதியளித்திருந்த போதும் அவ்வாறு செய்யத் தவறிவிட்டதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

## தவிசாளர் சுபியானுக்கு..

இது தொடர்பாக தம்பலகாமம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் பொலீஸ் உயர் அதிகாரிகளினதும், சனாதிபதியினதும் கவனத்துக்கும் குறித்த சம்பவம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

## கந்தளாய் அக்போபுரவில்..

திறந்துவைக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழாவில் கிழக்கு மாகாணசபையின் தலைவர் ஆரியவதி கலபதி, பௌத்தசாசன பிரதி அமைச்சர் குணவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.



## அங்கத்துவம் பறிபோனது..

நீக்கப்பட்டுள்ளதுடன் கட்சி அங்கத்துவத்தையும் இழந்துள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

இவருடன் கட்சியின் முன்னால் செயலாளர் திரு. கைலேஸ்வரராஜா மற்றும் உறுப்பினர் எம். வரதன் ஆகியோரும் கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். அதிகார துஷ்பிரயோகம், விதிகளை மதிக்காமை போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தொடரப்பட்ட ஒழுக்காற்று விசாரனைகளைத் தொடர்ந்து இவர்களின் உறுப்புரிமை பறிப்பு உட்பட பதவி நீக்கம் நிகழ்ந்துள்ளது.

## மூதூரில் சனாதிபதிக்கு..

மூதூரில் 20ம் திகதியன்று சனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்தும் சம்பூர் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தியும் ஊர்வலமொன்று இடம்பெற்றுள்ளது.

கிளிவெட்டி, பட்டித்திடல், மணற்சேனை, கட்டைப்பறிச்சான் ஆகிய அகதி முகாம்களில் தற்போதும் வாழ்ந்துவரும் மக்களே இப் பேரணியில் கலந்துகொண்டுள்ளனர். மூதூர் மணிக்கூட்டுச் சந்தியில் ஆரம்பித்த இவ் ஊர்வலம் மூதூர் பிரதேசச் செயலாளர் அவர்களிடம் மகஜர் ஒன்றைக் கையளித்ததுடன் நிறைவுற்றுள்ளது.

கடந்த ஏழு வருடங்களாக அகதி முகாம்களிலுள்ள சுமார் 1872 குடும்பங்களில் 139 குடும்பங்களை மீளக் குடியமர்த்தியதிற்காக சனாதிபதிக்கு நன்றியையும் ஆதரவையும் தெரிவித்தே இப்பேரணி நிகழ்ந்துள்ளது.

பேரணியிற் கலந்து கொண்டவர்களுக்கு மீளக் குடியமர்வுக்கான பேரணி மட்டுமே எனத் தெரிவிக்கப்-பட்டிருந்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்களால் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது..

கிளிவெட்டி, பட்டித்திடல், மணற்சேனை, கட்டைப்பறிச்சான் நலன்புரி முகாம்களில் கடந்த ஏழு வருடங்களாக வாழ்ந்து வரும் நாம் மிகுந்த வேதனையுடனும் எதிர்பார்ப்புடனும் காலங்கழிக்கின்றோம்.

எங்கள் சொந்த மண்ணுக்குத் திரும்புவோமா என 1872 குடும்பங்கள் ஏக்கத்துடன் இருந்த வேளையில், நலன்புரி முகாம்களில் உள்ள 139 குடும்பங்களை ஜனாதிபதி மீளக் குடியமரச் செய்துள்ளார்.

தனது மஹிந்த சிந்தனையின் கீழ் முழு அனுசரணையுடன் முதற் கட்டமாக நவரெத்தினபுரம் கிராமத்தைச் சேர்ந்த மக்களை மீள்குடியேற்றம் செய்தமைக்கு எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதனைத் தொடர்ந்து கூனித்தீவு மற்றும் சூடைக்குடாவைச் சேர்ந்த 92 குடும்பங்களைத் தங்களது பூர்வீகப் பூமியில் மீள்குடியேற்றம் செய்ய அனுமதி வழங்கப்பட்ட செய்தியானது எமக்கு மிகுந்த நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது.

இதேபோன்று இன்னமும் நலன்புரி நிலையங்களிலேயே தமது வாழ்க்கை முடக்கப்பட்டு அல்லறபடும் சம்பூர், கடற்கரைச்சேனைக் கிராமங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களையும் எங்களது சொந்தப் பிரதேசங்களில் மீள்குடியமர்த்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கள ஆய்வு..

காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் புல்மோட்டைப் பகுதியின் பிரச்சனைகள் தொடர்பாக மக்களை நேரில் கண்டறிந்து கொண்டார்.

புல்மோட்டை பிரதேசத்தின் பல பகுதிகள் கடற்படையினரால் அத்துமீறி அபகரிக்கப்படுகின்றன என்ற மக்களின் குற்றச்சாட்டுக்கு காணி அபிவிருத்தி அமைச்சருடனும், கடற்படை தளபதியுடனும், மாவட்ட செயலாள-ருடனும், காணி ஆணையாளர், வன அதிகாரிகள் மற்றும் கரையோர பாதுகாப்பு திணைக்களங்களினதும் கவனத்திற்கு கொண்டுவந்து உரிய தீர்வினை பெற்றுதட்தருவதாகவும் இவ்விடயத்தை சனாதிபதியின் நேரடி கவனத்திற்கு கொண்டுவருவதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

## பொத்துவிலில் ஹர்த்தால்..

கிழக்குப் பிரதேசங்களில் நிகழும் அபகரிப்புக்களுக்கும், ஆதிக்கங்-களிற்கும் எதிராக மக்கள் போராட்டங்கள் நிகழ்வதற்கு அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன.

பொத்துவில் பிரதேச ஆக்கிரமிப்புக்கு எதிராக 21ம் திகதி முதல் 24ம் திகதி வரை ஹர்த்தால் செய்வதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், கல்முனைப் பிரதேசத்தில் "இந்த நாடு மூவினத்திற்கும் சொந்தமான நாடு" என்ற தலைப்பில் வெளியான துண்டுப் பிரசுரத்தில் 22ம் திகதி கல்முனை முஹைதீன் ஜும்மாப் பள்ளிவாசலுக்கு முன்பாக அனைத்து சோனகர்களையும் அறுபது நிமிடம் அகிம்சை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுங்கள் என்றும் கோரிக்கைகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக வீரகேசரி இணையத்தளம் தெரிவித்துள்ளது.

## அலுவலகம் தாக்குதல்..

மாகாணச் செயலாளர், பதில் செயலாளர் ஆகியோரிடம் முறை-யிட்டுள்ளனர். இம்முறைப்பாட்டின் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அகமட்டின் இணைப்புச் செயலாளர்களில் ஒருவரான அனிஸ்டஸ் ஜெயராஜ் என்பவராலேயே அலுவலகம் தாக்குதலுக்கு உள்ளாகிய-தாகவும் அமைச்சின் அலுவலர்கள் அச்சுறுத்தப்பட்டதாகவும் அறியக் கிடைக்கின்றது.

விவசாய அமைச்சின் பிரதம கணக்காளருக்கும் தமக்குமிடையே-யான மனவருத்தங்களால் அக் கணக்காளரிடம் முறையிடச் சென்ற போது தன்னால் அக் கணக்காளரின் அறைக் கண்ணாடி சேதமாக்கப் பட்டதாகவும் அதனைத்தொடர்ந்து தற்போது யாவும் சுமுகமாக தீர்க்கப்பட்டுவிட்டது என்றும் அவ் இணைப்புச் செயலாளர் தெரிவித்துள்ளார்.



## சென்னைக்கான விமான..

தடவைகளிலிருந்து பதினான்காக குறைப்பதற்கு தீர்மானம் மேற்கொண்டுள்ளது.

மீளமைக்கப்பட்ட அட்டவணைப் பிரகாரம் நாளொன்றின் காலையிலும் மாலையிலும் மட்டுமே விமான சேவை நடைபெறவுள்ளது.

இந்தியச் சுற்றுலாவிற்குச் செல்லும் இலங்கைப் பயணிகள் அவதானமாக இருக்கவேண்டும் என வெளிவிவகார அமைச்சு இலங்கையில் அறிவித்தலை விடுத்த ஓரிரு மணித்தியால்ங்களில் விமான சேவைக் குறைப்பு அறிவிப்பை ஸ்ரீலங்கன் விமான சேவை வெளியிட்டுள்ளது.

## 24 மணி நேரப் பாதுகாப்பு :

## தமிழ் நாட்டில் உள்ள இலங்கை அரச நிலையங்களுக்கு

இலங்கைக்கெதிரான உணர்வலைகள் இந்தியாவின் தமிழ் நாட்டில் அதிகரித்துள்ள இவ்வேளையில் ஆயுதந் தாங்கிய படையினரின் பாதுகாப்பை தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அரச நிலையங்களுக்கு 24 மணி நேரமும் வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகரின் வேண்டுகோளின் படியே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்-பட்டுள்ளது. எதிர்வரும் வாரத்தில் ஜெனிவாவில் அமெரிக்க அரசினால் முன்மொழியப்படவுள்ள இலங்கைக்-கெதிரான மனித உரிமைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான தீர்மானக் காலத்தில் தமிழ்நாட்டில் மேலும் போராட்டங்கள் வெடிக்கலாம் என்பதால், அங்கு தொழில் புரியும் தமிழர்களின் பாதுகாப்பையும் இந்திய அரச படைகள் கருத்தில் கொண்டுள்ளதாக ஸ்தானிகர் மேலும் தெரிவித்தார். தமிழ் நாட்டில் ஸ்தானிகராலயம் உட்பட ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ், இலங்கை வங்கி, மகாபோதி சங்கம் போன்றவையே முக்கிய நிலையங்களாக தமிழ் நாட்டில் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நாடுகளும் அவற்றுக்கான சிறப்புப் பெயர்களும்

- எகிப்து - நைலின் கொடை
- ஆபிரிக்கா - இருண்ட கண்டம்
- ரோம் - ஏழு குன்றுகளின் நகரம்
- சுவிற்சலாந்து- ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்
- கியுபா - சக்கரைக் கிண்ணம், உலகத்தின் கூரை
- துருக்கி - ஐரோப்பாவின் நோயாளி
- குவாங்கோ நதி - சீனாவின் துயரம்
- பலஸ்தீன் - புனித நாடு
- நோர்வே - நல்லிரவுச் சூரிய நாடு
- ஜிப்ரோல்ரா - மத்திய தரைக் கடலின் திறவுகோல்
- சான் பிரான்சிஸ்கோ - பொன் வாயில் நகரம்
- இந்தியா - பொற்கோயில் நகரம்
- இலங்கை - இந்து சமுத்திரத்தின் முத்து

## தாய் சொல்லைத் தட்டாதீர்

ஓர் பசுமை நிறைந்த கிராமம் ஒன்றின் ஓர் கிணற்றில் ஓர் தாய் தவளையும், தந்தை தவளையும், இரு சகோதர தவளைகளும் குடும்பமாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஒரு நாளும் கிணற்றை விட்டு வெளியே வந்ததேயில்லை. ஒரு நாள் வெளியில் இருப்பவற்றைக் காணும் துடிப்பில் இரு சகோதரர்களும் தமது அம்மாவிடம் தங்களை ஒருமுறை வெளியே சென்று வர அனுமதிக்குமாறு கோரினார்கள். இருப்பினும் அம்மா அவர்களை கண்டிப்பாக வெளியே செல்லக் கூடாது என்றும், வெளியில் சென்றால் அவர்களுக்கு மிகப் பெரிய ஆபத்துக்கள் நேர வாய்ப்புள்ளது என்றும் கூறி அவர்களின் ஆசையை நிராசையாக்கி விட்டார்கள். அதன்பின் அவ் இருவரும் வெளியே அப்படி என்ன தான் இருக்கின்றது என்று அடிக்கடி தம்மிடையே கதைத்துக் கொள்வார்கள். நாளாக நாளாக இவ் ஆசை அவர்களுக்கு பேராசையாகி விட்டது. எவ்வாறேனும் இருவரும் வெளியே சென்று வருவது என்று உறுதி எடுத்துக் கொண்டனர். அன்றிலிருந்து அவ்விருவரும் கடும் ஆலோசனைகளில் ஈடுபடலாயினர். எவ்வாறு தாய் தந்தைக்குத் தெரியாமல் நாங்கள் வெளியே செல்ல முடியும் என்று மாறி மாறி திட்டங்களைச் சொல்லிக் கொண்டிருந்தனர். திடீரென்று ஒரு தவளை கூறியது "அம்மாவும் அப்பாவும் மதிய வேளையில் நித்திரை கொண்ட பின் நாங்கள் இருவரும் சத்தமில்லாமல் சென்று, அவர்கள் எழும்பும் முன் மீண்டும் வந்து விடலாம்" என்றது. என்றவுடன் மற்றைய தவளையும் அதையே ஆமோதித்தது. மறுநாள் இருவரும் உணவு உண்ட பின் தமது பெற்றோர் நித்திரையாகும் வரை காத்திருந்து அவர்கள் நித்திரையானதும் இருவரும் வெளியே சென்றனர். முதன் முதலாக வெளியே வந்ததால் அவர்களுக்கு எதைப் பார்த்து ரசிப்பது என்று தெரியவில்லை. அனைத்தும் பிரமிப்பாக இருந்தது. அழகிய விதம் விதமான பூக்கள் பூத்துக்கிடக்கும் செடிகள், பெரிய மரங்கள், பறவைகள், சிட்டுக் குருவிகள், அழகிய ஆடைகள் அணிந்த சின்னஞ் சிறுவர்கள், பல நிறங்களிலான வண்ணாத்துப் பூச்சிகள் இன்னும் எத்தனை எத்தனையோ. அவ்விரு தவளைகளும் தம்மை மறந்து இயற்கையின் அற்புதத்தில் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தனர். சற்று நேரத்தின் பின்னரே அவர்கள் தங்கள் சுயநினைவுக்கு வந்தனர். தாம் மிகவும் தொலை தூரம் வந்து விட்டதை உணர்ந்தனர். ஆகா அம்மாவும், அப்பாவும் எழும்பியிருப்பார்களே, எழும்பியதும் எம்மைத் தேடுவார்களே என்று அஞ்சி வீட்டை நோக்கி செல்ல நினைத்த வேளை முன்னால் ஒரு நீண்ட கரு நிற ஏதோ ஒன்று தம்மை விழுங்க வருவதை அவதானித்தார்கள். "அது .. அது பா.. .ம்பு........ செல் செல் விரைவாக செல்" என்று ஒரு தவளை மற்றைய தவளையை எச்சரித்தது. தங்கள் மொத்த பலத்தையும் திரட்டி விரைவாக செல்ல முயன்றனர். பயத்தின் மிகையால் இருவராலும் ஓரளவு வேகத்திலேயே ஓட முடிந்தது. என்ன ஓடி என்ன பயன்!! ஒரு தவளை அந்த நீண்ட பாம்பிடம் சிக்கிக் கொண்டது. அதைக் கண்ட மற்றைய தவளைக்கு எங்கிருந்து பலம் கிடைத்ததோ மிக விரைவாக ஓடி தாங்கள் இருந்த கிணற்றிற்குள் குதித்தது. பிள்ளைகளைக் காணாத அதிர்ச்சியில் தேடிக் கொண்டிருந்த பெற்றோர் இருவரும் தம் மகனைக் கண்டதும் மகிழ்ச்சியில் அவனை கட்டிக் கொண்டனர். அத் தவளைக்கு அழுகையை அடக்கமுடியாமல் வீரிட்டுக் கத்தி அழுதது. நடந்த அனைத்தையும் அவர்களிடம் அழுதழுது கூறியது. தன்னால் தன் தம்பியைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதை எண்ணி மிகவும் வேதனைப்பட்டது அத் தவளை. தான் செய்த தவறை மன்னிக்குமாறு பெற்றோரிடம் மன்னிப்புக் கேட்டது. இனி தான் தாய், தந்தையின் சொல்லை மீறி நடக்க மாட்டேன் என்றும் அவர்களுக்கு சத்தியம் செய்து கொடுத்தது.




## அழகுக் குறிப்புகள்..

தேங்காய் எண்ணெயில் மஞ்சள்தூளை போட்டுக் குழைத்து உடம்பிற்கு தடவி, பயத்தமாவை தேய்த்துக் குளித்தாள் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

ஆரஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.

முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.

பருமனாக இருப்பவர்கள் எடையை குறைக்க தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சை பழச்சாற்றை பிழிந்து அதனுடன் அரைக் கரண்டி தேன் கலந்து சாப்பிட்டால் எடை குறையும்.

நகங்களை வெட்டும் முன் எண்ணெயை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சர்க்கரையை கலந்து தலையில் லேசாக தடவிக்கொண்டு பிறகு தலைக்கு ஊற்ற வேண்டும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முடி அழகு பெறும்.

தேநீரில் வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறை பிழிந்து, தலையில் தேய்த்துக் குளித்தால், தலைமுடி பளபளப்பாகும்.

வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வேர்க்குரு வராமல், வெளியில் கறுத்துப் போகாமல் இருக்கும்.

இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு கரண்டி உப்பைப் போட்டு, கண்களை கழுவினால் கண்கள் பிரகாசமாக இருக்கும்.

கை, கால் முட்டிகளில் கறுப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் எலுமிச்சம்பழ சாற்றை தேய்த்து சோப்பு போட்டு குளிக்க வேண்டும் நாளடைவில் கறுப்பு நிறம் போய் விடும். தோல் வறண்டும், சுருக்கமும் இருந்தால் ஆலிவ் ஆயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

இரவு படுக்கும் முன், புதினா சாறு இரண்டு தேக்கரண்டி, அரை மூடி எலுமிச்சம்பழ சாறு ஆகியவற்றுடன் பயிற்றம்பருப்பு மாவை கலந்து முகத்தில் தடவிக் கொண்டு ப்த்து நிமிடம் ஊறிய பிறகு ஐஸ் ஒத்தடம் கொடுக்க முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்பட்ட தழும்பும் மறையும்.

ஆப்பிள் பழத்தை சின்னச் சின்ன துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.

முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்ததும் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

## தண்டூரிச் சிக்கின்

*தேவையான பொருட்கள்:*

கோழி - 1, தனி மிளகாய்த் தூள் - 3 மே.க, மல்லித்தூள் - 1 மே.க, நற்சீரகம் - 2 சிட்டிகை, கடுகு - 2 சிட்டிகை, இஞ்சி - 1 துண்டு, உள்ளி - 10 பல்லு, ஏலக்காய் - 4, தயிர் - 1 டம்ளர், தேசிப்பழம் - 1, மாஜரின் - 1 மே.க, தேங்காயெண்ணெய் - கால் போத்தல், உப்புத்தூள் - தேவையான அளவு

*செய்முறை:*

கோழி இறைச்சியைத் துப்பரவாக்கித் தசையை மட்டும் தனியாகப் பெரிய துண்டுகளாக வெட்டியெடுத்துக் கொள்க. பின் உள்ளி, இஞ்சி, சீரகம், கடுகு, ஏலக்காய் என்பவற்றை அம்மியில் வைத்து சிறிதளவு நீர் சேர்த்துப் பசுந்தையாக அரைத்தெடுத்துக் கொள்ளவும். பின்பு அரைத்த கலவையைப் பாத்திரத்தில் இட்டு அதனுள் மிளகாய்த் தூள், மல்லித் தூள், உப்புத்தூள் என்பனவுமிட்டுக் கலந்து தேசிப்புளி, தயிர் என்பவற்றையும் விட்டு நன்றாகக் கரைத்துக் கொள்க. அதனுள் வெட்டி வைத்துள்ள இறைச்சித் துண்டுகளையிட்டு நன்றாகப் பிசைந்து எட்டு மணி நேரம் வரை மூடி ஊற விடவும். பின்பு தோசைக் கல்லைக் காயவைத்துக் காய்ந்த பின்பு தோசைக் கல்லிற்குப் பரவலாக மாஜரின் பூசி இறைச்சித் துண்டுகளையெடுத்துத் தோசைக்கல்லில் பரவலாக அடுக்கித் தேங்காயெண்ணெயை அளவாக இறைச்சியின் மேல் ஊற்றி வேகவிட்டு, வெந்த பின்பு மறுபுறமும் திருப்பிப்போட்டு வேகவிட்டு எடுத்துப் ப்ரிமாறலாம்.



## சமபோஷ ரொட்டி



*தேவையான பொருட்கள்:*

சமபோஷ மாவு - 200கிராம், சிறிதாக வெட்டிய வெங்காயம் - 2 மே.கரண்டி, சிறிதாக வெட்டிய பச்சைமிளகாய் - 1 மே. கரண்டி, தேங்காய்ப்பூ - 3 மே. கரண்டி, முருங்கையிலை - 8 மே. கரண்டி, தே. எண்ணெய் அல்லது மாஜரீன் - 2 மே.கரண்டி, பால் - அரை தம்ளர், கரட் - 100 கிராம், உப்புத் தூள் - அளவிற்கு, மிளகுத்தூள் - அளவிற்கு

*செய்முறை:*

முருங்கையிலையைத் துப்பரவு செய்து கழுவிச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி எடுத்துக் கொள்ளவும். பின்னர் கரட்டைத் துப்புரவு செய்து கழுவி ஸ்கிறேப்பரில் துருவிக் கொள்க. தாச்சியை அடுப்பில் வைத்து 2 மே.கரண்டி மாஜரீன் அல்லது தே.எண்ணெய் விட்டுக் கொதித்ததும் சிறிதாக வெட்டிய வெங்காயம், பச்சைமிளகாய் என்பவற்றையிட்டு வதங்கவைத்து, வதங்கியதும் முருங்கையிலையையும், கரட்டையும் இட்டு சிறிது நேரம் மூடி வதங்க விடவும். பின் இவை ஓரளவு வதங்கியவுடன் தேங்காய்ப்பூ, மிளகுத் தூள், உப்புத்தூள் என்பவற்றையிட்டு நன்கு சேர்த்துக் கொண்ட பின்பு அடுப்பிலிருந்து இறக்கிக் கொள்க. அதன் பின்பு சமபோஷ மாவை அரித்துப் பாத்திரத்திலிட்டு தாளித்த கலவையை அதனுள் கொட்டிப் பாலும் விட்டு அளவிற்குத் தண்ணீரும் விட்டு ரொட்டிமாப் பதத்திற்குக் குழைத்து உருண்டைகளாக்கி ரொட்டி போல் தட்டி எண்ணெய் பூசிய கல்லிலிட்டு வாட்டி எடுக்குக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

### புதுச்சட்டத்தை எதிர்த்து சுங்க அதிகாரிகள் வேலை நிறுத்த அச்சுறுத்தல்.

புதிய இரண்டு சுங்க வரிச் சட்ட இணைப்புக்களை அரசு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முற்பட்ட நிலையில் இச்செயற்பாடு சுங்க அதிகாரிகளை ஆத்திரமூட்டியுள்ளது. இதனால் அவர்கள் வேலைநிறுத்தத்தில் குதிக்கப் போவதாக அச்சுறுத்தியுள்ளனர். ஏனெனில் இவ்விரு புதிய சட்ட இணைப்புக்களாலும் பெரும் பெறுமதிகளில் இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் வியாபாரிகள் நன்மையடைய வாய்ப்புள்ளது என்பதுடன் செலுத்த வேண்டிய சுங்கத் தீர்வையிலிருந்து கழன்று கொள்ளும் வாய்ப்பும் உள்ளது என்று சுங்க அதிகாரிகள் வாதிடுகின்றனர். சிரேஷ்ட சுங்கத்தீர்வை அதிகாரி ஒருவர் கூறுகையில் கொள்வனவுப் பெறுமதியைக் குறைத்துக்காட்டுதல் உட்பட வேறு வழிகளில் வரி ஏய்ப்புச் செய்ய முற்படும் இறக்குமதியாளர்களை இவ்விரு சட்டங்களும் ஊக்குவிப்பதாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டார். கடந்த வாரம் வெள்ளிக்கிழமை சுங்க அதிகாரிகள் மதியத்திலிருந்து மாலை வரை வேலைகளைச் செய்வதை தவிர்த்து முன்னெச்சரிக்கை வேலைநிறுத்தம் ஒன்றை நிகழ்த்தியிருந்தார்கள்.

### புதிய மத்தள விமான நிலையத்தில் மேலும் பல சலுகைகள்

மார்ச் மாதம் 18ந் திகதி திறக்கப்படவுள்ள மத்தளை விமான நிலையத்தின் ஊடாக பயணிக்க விரும்பும் பயணிகளுக்கு பெருமளவு கழிவுப் பொதிகள் வழங்கப்படவுள்ளதாக பொது விமானத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இக்கழிவுப் பொதிகளை மத்தள விமானத் தளத்தினூடாக தம்ப தீபம், மக்கா போன்ற இடங்களுக்குப் பயணிக்கும் இறையாத்திரிகர்களுக்கும் மேற்காசிய நாடுகளுக்கு தொழில் நிமித்தம் பயணிக்கும் மக்களுக்கும் வழங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### பாராளுமன்றத்தில் சிறுநீரக வியாதி தொடர்பாக உலக சுகாதார திணைக்களத்தின் அறிக்கை

வறட்சிப் பிரதேச விவசாயிகளை தாக்கிவரும் அசாதாரண சிறுநீரக வியாதி தொடர்பாக இலங்கை அரசுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார அமைப்பு மேற்கொண்ட ஆய்வுகளும் அவற்றின் முடிவுகளும் மந்திரிசபையிடம் கையளிக்கப்பட்டதாகவும் அம்முடிவுகள் உரிய நடவடிக்கைகளுக்காக உரியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற முன்மொழிவுகள் கிடைத்தவுடன் அதனை மந்திரி சபை ஆராய்ந்த பின்னரே இவ்விடயங்கள் யாவும் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### வெளிநாட்டு இருப்புக்களை கபளீகரிக்கும் கடன் பெறுகைகள்.

இலங்கையின் வெளிநாட்டு இருப்புக்களாக காட்டப்படும் தொகையில் சுமார் 2 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் பணமாகக் காணப்படுவதால் அவை அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கையின் பெறுமதியினை மேலும் தளம்பலடையச் செய்யும் என பொருளாதார வல்லுணர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த வருடம் மார்ச் மாதத்தில் 121 ரூபாவாக இருந்த இலங்கையின் முக்கிய பரிமாற்றுப் பணமான அமெரிக்க டொலர் இவ்வருடம் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் 128 ரூபாவுக்குத் தளம்பியுள்ளது.

## The Sunday Observer:

### விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களால் வெளியிடப்பட்ட தப்புத்தகவல்கள் உடைத்தழிக்கப்பட்டது.

ஜெனிவாவில் இலங்கைக்கெதிரானவர்களாலும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாலும் மேற்கொள்ளப்பட்ட தப்புத்தகவல் செயற்பாடுகள் உடைத்தழிக்கப்பட்டதாக கலாநிதி பிரதீபா மகணமகேலா தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் தற்போதய கூற்றுக்களிலிருந்து இந்தியாவும் ஏனைய முக்கிய அங்கத்துவ நாடுகளும் இலங்கைக்கு எதிராக அவை முன்னர் கொண்டிருந்த தப்பபிப்பிராயங்களிலிருந்து விலகி வருவதுடன் இலங்கையின் முயற்சிகளை ஏற்றுக்கொள்ள தயாராகிவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்நிலையில் "அமெரிக்கா ஆரம்பத்தில் கொண்டுவந்த பிரேரணையை தவிர்த்து மற்றொரு புதிய பிரேரணையை கொண்டுவரும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றது" என அவர் தெரிவித்தார். இலங்கை அரசினால் தயாரிக்கப்பட்ட மனித உரிமைகள் தொழிற்பாட்டுத் திட்டம் 2011 - 2016 இனை உலகச் சமூகங்கள் வரவேற்றுள்ளது என மேலும் தெரிவித்த அவர் இந்நடவடிக்கைகள் இலங்கை அரசினால் தன்னிச்சையாக பல ஆண்டுகளின் ஆராய்ச்சியின் பலனாக உருவாக்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### புலி ஆதரவு கோரிக்கைக்கு ஜேர்மனியில் விழுந்த பெருத்த அடி

ஜேர்மனியில் 65,000 தமிழர்கள் வாழ்கின்ற போதிலும் அவர்கள் இலங்கைக்கு எதிரான சாதாரண எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றுக்குக் கூட தமது ஆதரவை தெரிவிக்காது இருக்கின்றார்கள் என ஜேர்மனியில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் 2ம் செயலாளர் கோகுல ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார். தமிழ் ஆதரவாளர்கள் இலங்கையின் சுதந்திர தினத்தில் பேர்ஸினிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் ஒன்றிற்கான அழைப்பினை விடுத்திருந்த போதும் 5000 தமிழர்கள் வாழும் பேர்ஸினிலிருந்து வெறும் 5 தமிழர்கள் மட்டுமே கூடியதாக தெரிவித்தார். இது எதனை வெளிப்படுத்துகின்றது என்றால், ஜெர்மானிய தமிழர்கள் இலங்கை அரசின் மீது விசுவாசம் கொள்ளத் தொடங்கியுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

### மிக நுணுக்கமான நடவடிக்கையினை ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை முன்மொழிய வேண்டும் – வாசுதேவ

இலங்கையில் தற்போதுள்ள நிலை தொடர்பாக நியாயமானதும் வெளிப்படையானதுமான விடயங்களை விவாதித்து அவற்றின் நுணுக்கமான விடயக் கையாள்கை தொடர்பான முன்மொழிவுகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை மேற்கொள்ள வேண்டும் என சமூக ஒற்றுமை மற்றும் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். பொறுப்புக் கூறுதல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபை ஒரு மேலெழுந்தவாரியான கருத்தினை முன்மொழிகிறதே ஒழிய நுணுக்கமான முன்மொழிவுகள் எதனையும் தற்போது வரை முன்மொழியவில்லை என மேலும் தெரிவித்தார்.

### தனியார் ஆய்வுகூடங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும்.

தனியார் ஆய்வு கூடங்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட பின்னரே செயற்பட வேண்டும். தற்போது பெருமளவு பதிவு செய்யப்படாத ஆய்வு கூடங்கள் இயங்குவதால் அவற்றின் மீது சுகாதார அமைச்சினால் கட்டுப்பாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. இலங்கையில் எத்தனை பதிவு செய்யப்படாத ஆய்வுகூடங்கள் இலங்கையில் உள்ளன என்பது தெரியாமலுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Leader

### கடற்படை பயிற்சியில் ரொக்கட் தாக்குதல் – விசாரணைகளை மேற்கொள்ளும் கடற்படையினர்

வேலணை கடற்படைப் பயிற்சி முகாமில் புதிய கடற்படை சிப்பாய்களுக்கு நடந்த பயிற்சியின் போது அவர்கள் மீது ஏவப்பட்ட ரொக்கட் குண்டு வெடித்து 6 பயிற்சியாளர்கள் காயமடைந்தது தொடர்பான விசாரணைகளை கடற்படை ஆரம்பித்துள்ளது. இவ்வெடிப்பினைத் தொடர்ந்து பயிற்சி பெறும் படையினரின் பாதுகாப்பு தொடர்பான முப்படையினரும் எவ்வெவ் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனும் கரிசனை எழுந்துள்ளது. ஆர்.பி.ஜி பயிற்சியினை வழங்கும் பொழுது பின்புறமாக அக்குண்டு ஏவப்பட்டதால் அதன் பயிற்சியாளர் உட்பட 6 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் சில குறிப்பிட்ட ஆயுதங்களினால் பயிற்சிகளை மேற்கொள்ளும் போது உண்மையான வெடிகுண்டுகளையே பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அதனால் தான் இவ்வாறானவை நிகழ்கின்றன என மேலும் தெரிவித்தார்.

### பொதுநலவாய தலைவர்கள் மாநாட்டில் ஐக்கிய இராச்சியம் கலந்து கொள்ளாது.


பிரித்தானிய பாராளுமன்றின் வெளி விவகாரங்களுக்கான தேர்வுக்குழு இலங்கையில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாயத் தலைவர்கள் மாநாட்டில் பிரித்தானியா கலந்துகொள்ளக்கூடாது எனும் வேண்டுகோள்களை பெற ஆரம்பித்துள்ளது என பிரித்தானிய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார். தற்போது வரை பிரித்தானியா இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்கான எவ்வித தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லை என தெரியவருகின்றது. இலங்கையில் மனித உரிமை விவகாரங்கள் மேலெழுந்துள்ள இவ்வேளையில் இவ்வாறு கலந்து கொள்வது தொடர்பான எவ்வித உறுதிமொழிகளையும் பிரித்தானியா வழங்கவில்லை.

### பிரேரணையைப் படிப்பதற்காக தேர்வுக்குழு

அமெரிக்காவினால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் அங்கத்தவர்களிடமிருந்து மாதிரிப் பிரேரணையை கற்றறிந்து கொள்வதற்காக அரச குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது மாதிரிப் பிரேரணையின் விடயங்களைப் பெற்றுக் கொண்டுள்ள அரசு அம் மாதிரிப் பிரேரணை தொடர்பாக தொடர்பாக கற்றறியும் நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். இக்குழு மாதிரிப் பிரேரணையைக் கற்றறிந்து அவை தொடர்பான பரிந்துரைகளை அரசுக்கு வழங்கிய பின் அரசு இவ்விடயம் தொடர்பான தனது கருத்துக்களை வெளியிடும் எனவும் தெரிவித்தார்.


### மாத்தளையில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடுகள் தொடர்பாக ஜே.வி.பி முடிவெடுக்கவில்லை.

மாத்தளைப் புதைகுழிகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டை அரசசார்பற்ற நிறுவனமொன்று கோரியுள்ளது தொடர்பாக தமக்கு தற்போது வரை உத்தியோக பூர்வமாக தெரியாது என்றும் அவை தொடர்பான என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதை தாம் இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திசாநாயக்கா தெரிவித்தார்.



# முரசின் விளையாட்டு செய்திகள்

## ஐ.பி.எல் தொடக்க விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குகிறார் இந்தி நடிகர் ஷாருக்கான்



கிரிக்கெட் ரசிகர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்படும் 6-வது ஐ.பி.எல். போட்டிகள், ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி தொடங்க இருக்கிறது. தொடக்கவிழா நிகழ்ச்சிகள், 2ஆம் திகதி மாலை, கொல்கத்தாவின் சால்ட் லேக் ஸ்டேடியத்தில் நடைபெற உள்ளது. துவக்க விழா நிகழ்ச்சிகளை ஷாருக்கான் குழுவினர் நடத்த இருப்பதாகத் தெரிகிறது. சென்ற ஆண்டு ஐ.பி.எல். இறுதிப் போட்டியில், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியினரை வென்று, கோப்பையைக் கைப்பற்றிய கொல்கத்தா குழுவினரின் அணி உரிமையாளரான ஷாருக்கானுக்கு, இது மற்றொரு வெற்றியாகும். காத்ரினா கைப், பிரியங்கா சோப்ரா போன்ற பிரபல சினிமா நட்சத்திரங்கள் பங்குபெறுவதால், இந்நிகழ்ச்சி பகட்டான ஒரு விழாவாகக் களைகட்டக் கூடும். இந்நிகழ்ச்சிகளை நடத்தும் உரிமத்தை ஷாருக்கான் பெற்றதில், அவரைவிடவும், அவரது நண்பரான ராஜீவ் சுக்லா அதிக மகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்தார். பெரிய அளவில் ஒருங்கிணைத்து நடத்துவது என்பது இந்தக் குழுவினரால் நடத்திக்காட்டப்பட்ட ஒன்றாகும் என்று ஐ.பி.எல். தலைவரான சுக்லா கூறினார்.

## வொற்சனும் கிளார்க்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்

அவுஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க்கும், உப தலைவர் ஷேன் வொற்சனும் தங்களுக்கிடையிலான முரண்பாடு-களைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் திறமை வெளிப்பாடுகளுக்கான பொது முகாமையாளர் பற் ஹொவார்ட் தெரிவித்துள்ளார்.



வீரர்களான ஷேன் வொற்சன், பற் கமின்ஸ், மிற்சல் ஜோன்சன், உஸ்மான் கவாஜா ஆகியோர் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது போட்டியில் சேர்க்கப்பட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அதன் பின்னர் ஷேன் வொற்சன் அவுஸ்திரேலியாவிற்குத் திரும்பியுள்ள நிலையிலேயே பற் ஹொவார்ட் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். மைக்கல் கிளார்க்கும், ஷேன் வொற்சனும் இணைந்து செயற்படும்போது முரண்பாடுகளைக் கொண்டுள்ளதாகவும், அதை இருவரும் சேர்த்துத் தீர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் பற் ஹொவார்ட் தெரிவித்துள்ளார்.

## ஐ.சி.சி தரவரிசையில் முதல் முறையாக முதல் 10 இடத்திற்குள் நுழைந்தார் - புஜாரா

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ஐ.சி.சி.) டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்திய வீரர் புஜாரா முதல் முறையாக டாப்-10 இடத்திற்குள் நுழைந்துள்ளார். ஐதராபாத் டெஸ்டில் இரட்டை சதம் அடித்ததன் மூலம் அவர் 23-வது இடத்தில் இருந்து 10-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார். சச்சின் தெண்டுல்கர் 19-வது இடத்திலும் (2 இடம் சரிவு), அணித்தலைவர் டோனி 21-வது இடத்திலும், விராட் கோலி 24-வது இடத்திலும் உள்ளனர். முதல் இரு இடங்களில் தென் ஆப்பிரிக்காவின் அம்லா, ஆஸ்திரேலியாவின் மைக்கேல் கிளார்க் இருக்கிறார்கள்.

பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் தமிழகத்தை சேர்ந்த அஸ்வின் முதல் முறையாக முதல் 10 இடத்திற்குள் வந்துள்ளார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 2-வது டெஸ்டில் மொத்தம் 6 விக்கெட்டுகள் கைப்பற்றிய அஸ்வின் 11-வது இடத்தில் இருந்து 8-வது இடத்தை பிடித்துள்ளார். முதல் மூன்று இடங்களில் தென் ஆப்பிரிக்காவின் ஸ்டெயின், பிலாண்டர், பாகிஸ்தானின் சயீத் அஜ்மல் தொடருகிறார்கள்.




## எட்டு சதங்களுடன் விறுவிறுப்பாக நடந்த இலங்கை - வங்கதேசம் முதல் டெஸ்ட் கிரிக்கட் போட்டி சமனிலையில்



இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள வங்கதேச கிரிக்கெட் அணி, 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் கடந்த 8-ம் திகதி தொடங்கி நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இலங்கை அணி, முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்புக்கு 570 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தம் (டிக்ளேர்) செய்தது. திரிமன்னே (155 ஓட்டங்கள்), சங்ககாரா (142 ஓட்டங்கள்), சண்டிமால் (116 ஓட்டங்கள்) ஆகியோர் சதம் அடித்தனர். பின்னர் முதல் இன்னிங்சை ஆடிய வங்கதேச அணி 638 ஓட்டங்கள் குவித்தது. அணித்தலைவர் முஷ்பிகுர் ரஹீம் இரட்டைச் சதம் அடித்து அசத்தினார். சர்வதேச போட்டிகளில் இரட்டைச் சதம் அடித்த முதல் வங்கதேச வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். இதேபோல் முகமது அஷ்ரபுல் 190 ஓட்டங்களும், நசீர் உசைன் 100 ஓட்டங்களும் குவித்து அணிக்கு வலு சேர்த்தனர்.

இதையடுத்து 2-ம் இன்னிங்சை ஆடிய இலங்கை அணி, 4-ம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 116 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஆட்டத்தின் இறுதி நாளன்றும் தொடர்ந்து ஆடிய இலங்கை அணிக்கு தில்ஷான் (126 ஓட்டங்கள்), சங்ககாரா (105 ஓட்டங்கள்) ஆகிய இருவரும் சதம் அடித்து, முன்னிலை பெற வைத்தனர். விதானகே 59 ஓட்டங்கள் அடித்தார். இதனால் 4 விக்கெட் இழப்பிற்கு 335 ஓட்டங்கள் எடுத்த நிலையில் இடைநிறுத்தம் (டிக்ளேர்) செய்வதாக இலங்கை அணித்தலைவர் அறிவித்தார். இதனால் வங்கதேச அணியின் வெற்றிக்கு 268 ஓட்டங்கள் என நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை எதிர்கொண்ட வங்க தேச அணி, ஒரு விக்கெட் இழப்பிற்கு 70 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆடிக்கொண்டிருந்தபோது பந்து பரிமாற்றங்கள் முடிவடைந்தது. எனவே, இப்போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலை ஆனது. இரட்டைச் சதம் அடித்த வங்கதேச வீரர் முஷ்பிகுர் ரஹீம் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். இப்போட்டியில் இரு இன்னிங்ஸ்களிலும் சேர்த்து 8 சதங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து இரு அணிகளும் மோதும் 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொழும்பில் 16-ம் தேதி தொடங்குகிறது.

## காதலனைத் தாக்கியதாக புகார்: கைதாகிறார் முன்னாள் டென்னிஸ் வீராங்கனை கேப்ரியாட்டி

முன்னாள் நம்பர் ஒன் டென்னிஸ் வீராங்கனை ஜெனீபர் கேப்ரியாட்டி. 37 வயதான அவர் 3 கிராண்ட்சிலாம் பட்டம் பெற்றுள்ளார். 2001-ம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓபன், பிரெஞ்சு ஓபன் பட்டத்தையும், 2002-ம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓபன் பட்டத்தையும் கைப்பற்றினார். 1992-ம் ஆண்டு ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்றார். ஜெனீபர் கேப்ரியாட்டிக்கும் முன்னாள் பல்கலைக் கழக கோல்ப் வீரரான இவான் பிரானன் என்பவருக்கும் இடையே காதல் இருந்தது. 10 மாதமே நீடித்த இந்த காதல் கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் முறிந்தது. இந்த நிலையில் கடந்த மாதம் 14-ந்தேதி காதலர் தினத்தன்று உடற்பயிற்சி கூடத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த முன்னாள் காதலர் இவான் பிரானை கேப்ரியாட்டி அடித்து உதைத்தாக புகார் கூறப்படுகிறது. அவரது மார்பில் 4 முறை கேப்ரிடியாட்டி குத்தியதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புகாரின் பேரில் ஜெனீபர் கேப்ரியாட்டி கைது செய்யப்பட வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. கேப்ரியாட்டி விளையாடும் காலக்கட்டத்தில் பல சர்ச்சையில் சிக்கியவர் ஆவார். ஊக்க மருந்து பயன்படுத்திய அவர் 1994-ம் ஆண்டு தற்கொலைக்கு முயன்று அதில் இருந்து உயிர் தப்பினார்.



## பாடசாலைகளுக்கு இடையேயான வலயமட்ட கராத்தே போட்டிக்கான தெரிவுப் போட்டி

தம்பலகாமம் தி/ஆதி கோணேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கடந்த 05.03.2013 அன்று வலயமட்ட கராத்தே போட்டிக்கான தெரிவுப்போட்டி அப்பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது அப்போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள், நடுவர்கள், ஆசிரியர் சங்கத்தினர் பாடசாலை அதிபர் திரு. வே. தவராஜா மற்றும் பிரதான பயிற்றுவிப்பாளர் திரு. ஆர். சத்தியராஜன் ஆகியோரையும் படத்தில் காணலாம் இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் இப்பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டியின் இறுதி நாளான 14.03.2013 அன்று வழங்கப்பட்டது. ஆயிரம் பாடசாலை திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட இப்பாடசாலையின் மாணவர்கள் பல கோணங்களிலும் தமது திறமைகளை வெளிக்காட்டி உள்ளனர். இனிவரும் காலங்களில் கராத்தே விளையாட்டின் மூலமும் தம் பாடசாலையை பிரதிநிதித்துவப்படுத்தி தம் திறமைகளை வெளிக்கொணர்வர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 16. 03. 2013ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.